உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 36 | பிங்கள – ஐப்பசி – 10—11—77 | இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையஞ் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

# வினையும் விளைவும்

## இறைவனும் இயற்கையும் :

அளவிடற்கரிய பேராற்றலும், நியதி தவறாத இயல்பும் இயற்கையின் தன்மைகளாக விளங்குவன. ஒப்புயர்வற்ற பரம் பொருளிடம் காணப்பெறும் மேற்கண்ட இயல்புகளைக் கூர்ந்து நோக்கிய நம் முன்னோர்கள் இயற்கையை இறைவனது ஆற்றல் வெளிப்பாடு எனப் போற்றி வணங்கினர். இறையருளை நம்பாத சிலர்கூட இயற்கையின் நியதிகளைப் போற்றி நிற்பதை இன்றும் காண்கிறோம். இயற்கையும் இறைவனும் வேறல்ல எனக்கண்ட முன்னோர்கள் பஞ்சபூதங்களிலேயே இறைவனைக் கண்டு போற்றினர்.

"பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்துள் மறைந்தது பார்முதல் பூதம்"

என இதன் திறங்குறித்துத் திருமூலர் அழகுற விளக்கியருளினர்.

### விதையும் விளைவும் :

இயற்கை வழங்கும் வற்றாத பெருவளங்களை ஏற்று மகிழும் மனித இனம், அவை இறையருளே என நினைந்து விழா எடுத்துப் போற்றி வருவதைப் 'பொங்கல்' போன்ற விழாக்களில் காணமுடிகிறது. அதுபோலவே, இயற்கையின் பெருஞ் சீற்றங்களையும் இறைவனின் பெருஞ் சீற்றமென்றே கருதி, இச் சீற்றத்திற்கான நமது தவறுகள் யாவை எனத் தற்சோதனை செய்து கொள்ளவும், மேலும், இவ்வகைத் தவறுகள் நிகழாது பாதுகாத்துக்கொள்ளவும் பழகும் பக்குவத்தைப் பெறுதல் இன்றியமையாதது. விதை ஒன்று போட விளைவு ஒன்றாக இருத்தல் உலகில் இல்லை. எனவே, புயல், வெள்ளம், எரிமலைச் சீற்றம், நில நடுக்கம் போன்ற இயற்கையின் சீற்றங்களை உறுதியோடு எதிர்நோக்கி, மனித இனம், பிழையற்ற தூய வாழ்க்கைக்குத் தம்மைத் தயார் செய்து கொள்ளுவது இன்றியமையாதது.

### தனிமனிதனும் சமுதாயமும் :

தனி மனிதர்கள் செய்யும் பெரும் பிழைகளுக்கு உரிய தண்டனைகளை இறையருள் தவறாது கூட்டுவிக்கும் என்பதனை வேத வழிப்பட்ட எல்லாச் சமயங்களும் உடன்படுகின்றன. 'தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை வீயாது அடியுறைந் தற்று' எனத் திருவள்ளுவரும் இதனை உடன்படுவர். தனி மனிதர்களது தவறுகளுக்கு உரிய தண்டனைகள் இறையருளால் வரையறுக்கப்பெறுவது போல ஒரு சமுதாயமே சேர்ந்துசெய்யும் தவறுகளுக்கும் உரிய தண்டனை நிச்சயம் உண்டு என்பதே சான்றோர்கண்ட உண்மை. சமுதாயத்தின் ஒட்டு மொத்தமான அறப்பிழைகளுக்குக் கட்டாயம் அச் சமுதாயம் தண்டனைபெற்றே தீரும் என்பது உலகியல் உண்மை. அறம் மலிந்த சான்றோர் சிலர் வாழ்ந்திருப்பினும், காட்டுத்தீயில் சந்தன மரங்களும் அழிதல் போலச் சமுதாயத்தில் ஒருமித்த பாவ விளைவில் இவர்களது அறங்களும் செயலற்றுப் போகின்றன என்பதனைக் காண முடிகிறது. ஆங்கிலக் கவிஞன் * 'எமர்சனின்' கருத்துக்கள் இதனை நன்கு வலியுறுத்துகின்றன.

---

* The Violation of the Laws of Nature by our predecessors and our Contemporaries are furnished in ours also. The discease and infraction of certain natural laws which breed Violation to end in such compound misery. The Lockjaw that bends a man's head out of his heels., hydropholia that

## இருவகை விலங்குகள் :

தீவினைகளை மிகுதியாகச் செய்துவிட்டுப் பின்னர் நல்வினைகள் இயற்றுவதன் மூலம் முன் செய்த தீவினையின் விளைவை வென்றுவிட முடியும் என்பதனை நமது சாத்திர நூல்கள் உடன்படுவதில்லை. குறிப்பாகச் சைவ - சித்தாந்தம்; ஒவ்வொரு உயிரும், தாம் ஈட்டிய பாவ, புண்ணியங்களுக்குரிய நன்மை தீமைகளை அனுபவித்தே தீர்க்க வேண்டும் என வற்புறுத்துகிறது. தீவினையின்பயன் இரும்பு விலங்கானால், நல்வினையின் பயனும் பொன் விலங்காகவே அமைகின்றது என்பதனை ஆழ்ந்து நோக்கினால் அறியலாம். எனவே, சைவ சித்தாந்தம் நல்வினை தீவினை என்ற இரண்டும் அற்று, மலபரிபாகம் உற்ற உயிர்களே பரமுத்தி பெற இயலும் என வற்புறுத்துகின்றது.

## வினைவழிவிளைவுகள் :

நல்வினை தீவினைகளின் பயன் ஏதேனும் ஒரு வடிவில் நம்மிடம் வந்து சேர்கின்றது. ஆனால், உண்மையை அறியும் வலியற்ற மனிதர்கள் பலரும், இந்நன்மை தீமைகள் இவரால் அல்லது இதனால்தான் வந்தன எனக்கருதி, அதுகாரணமாக நட்புக்கொள்வதும், பகைப்பதுமாக வாழ்கின்றனர். இன்பத் துன்பங்கள் அவரவர் வினைவழி வருவன என்பதனை மனித இனம் உணர்ந்து உய்யவேண்டுமெனக் கருதிய அருளாளர்களுள் நமது திருத்தருமை ஆதீனத்தைத் தோற்றுவித்தருளிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய கருத்துரைகள் குறிப்பிடத்தக்கன.

"அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்
எவரெவர்க் குதவினர் எவரெவர்க் குதவிலர்
தவரவர் நினைவது தமைஉணர் வதுவே"

ஏழ்மை மற்றும் செல்வத்தில் பிறப்பதற்கும் பழவினையே காரணம். மேலும், வாழ்வியல் இன்பத் துன்பங்களுக்கும் அவ ரவர் செய்த வினையே அடிப்படை என்பதனை இப்பாடல் அழகுற விளக்குவதைக் காணலாம்.

---

makes him bark at his wife., insanity that makes him eat grass, wax, plague, cholera, famine indicate a ferocity in nature which as it had its inlet by human crime must have its outlet by human suffering. — Emerson.

**பின்னமறக்கூட்டும்பிரான் :**

ஆயிரம் பசுக்கள் கூடியுள்ள இடத்தில் ஒரு கன்றினை விடுத்தால், அது தன் தாய்ப்பசுவினை இனங்கண்டு சேர்ந்துவிடும். அதுபோல் பழவினையும் உரிய உயிரினை உரியபோதில் தவறாது சென்று பற்றும்படிச் செய்பவர் பரமன். இதனையும்,

" இன்னவினை இன்னதலத் தின்னபொழு தின்னபடி
இன்னதனால் எய்தும் என அறிந்தே — அன்னவினை
அன்னதலத் தன்னபொழு தன்னபடி அன்னதனால்
பின்னமறக் கூட்டும் பிரான் "

எனத் தெளிவுபெறக் குறித்தார் ஸ்ரீ குருஞானசம்பந்தர். அறிவற்ற ஜடமாகிய வினைகள் தாமே உரிய உயிர்களைச் சென்று பற்றும் ஆற்றலில்லாதன. உயிர்களுக்குத் தவறின்றி வினைகளைக் கூட்டுவிப்பவன் இறைவனே என்கிறது பாட்டு. இதன் உண்மையினை நமது தேவாரத் திருமுறைகள் பலவாறு விளக்கிக் காட்டுகின்றன.

**சிந்தனைக்குச் சில......**

எனவே, மனித இனம் உணரவேண்டுவன சிலவற்றைத் தொகுத்து நோக்குவோம். எய்தவன் இருக்க அம்பினை நோவது அறியாமை. தவறுகளுக்கு உரிய தண்டனைகள் தவறாது வந்தே தீரும். சமுதாயமே ஒருசேரச்செய்த தீமைகளின் அளவு மிகும் போது இயற்கையின் சீற்றங்கள் விளைகின்றன. துன்பங்களுக்கு நாமும், நமது முன்னைய பிழைகளுமே காரணம் என உணராது அதுகாரணமாகப் பிறரை இகழ்வதும், பழிவாங்குவதும் அறியாமையேயாகும். துன்ப நீக்கமும், இன்ப ஆக்கமும் பெற விரும்பும் உயிர்கள் அறநாட்டங்கொண்டு, மறத்திலிருந்து விலகி வாழப் பழகுதல்வேண்டும். இன்பத்தினை மகிழ்வோடு ஏற்றல் போலத் துன்பத்தினையும் மகிழ்வோடு ஏற்கும் மனநிலை வளர வேண்டும். எந்த நிகழ்ச்சியையும் நேரடியாக ஆய்ந்து முடிவு எடுக்காமல் அதன் பின்னணியை ஊடுருவிப் பார்க்கப் பழகுதல் வேண்டும்.

" மலையே வந்து விழினும் மனிதர்காள்
நிலையில் நின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே "

என்று அப்பர் சுவாமிகள் பாடியருளியவாறு மன உறுதியோடு இறைவனைத் தியானித்தல்வேண்டும்.

## மனித இனம் மலர்க !

தான் செய்த தவறுக்காகத் தண்டனைபெற்று அழுது நிற்கும் மகனைத் தாய் தழுவி ஆறுதல்கூறி அவன் துன்பம் களைதல்போல இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பெற்றுத் துயருறும் ஆயிரக் கணக்கானவர்களின் துன்பங்களைப் பகிர்ந்துகொண்டு அவர்கள் துயர் துடைக்கும் தூயபணியில் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள மனித இனம் பண்பாட்டு வளர்ச்சி பெற்று உய்யவேண்டும். அற உணர்வுகளும், மனிதாபிமானச்செயல்களும் பிறர் தூண்டுதல் இன்றியே மனித இனத்திற்கு வாய்க்க இறையருள் துணை நின்று அருள்பாலிக்கப் பிரார்த்திப்போம்.

## ஞானபீடம் அமர்ந்தநாள் விழா

தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடம் அமர்ந்தநாள் விழா 6-11-77 அன்று ஸ்ரீஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் ஏகாதச ருத்ரஜபம், வேள்வி, விசேஷ அபிஷேக ஆராதனைகள் அர்ச்சனை முதலியவற்றுடன் சிறப்புற நிகழ்ந்தன. அன்று காலையில் ஆதீன ஓதுவாமூர்த்திகளாலும் கல்லூரிப் பேராசிரியர்கள் மாணவர்களாலும் பன்னிரு திருமுறைப் பாராயணம் நிகழ்த்தப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசி அருளினார்கள்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜைப் பெருவிழாவில்

வழங்கியருளிய

# ஆசியுரை

11—5—77

உலகில் காணப்படும் உயிரினங்களை ஓரறிவுமுதல் ஆறறிவு வரை பகுத்துக் கூறுவார் தொல்காப்பியர். புல் மரம் முதலிய தாவரங்கள் தொட்டால் உணரும் மெய்யுணர்வுடைய ஓரறிவுயிர்களாகும். நத்தை சங்கு போல்வன மெய்யுணர்வோடு சுவையறியும் நாவுணர்வினையும் பெற்றுள்ள ஈரறிவுயிர்களாகும் எறும்பு கரையான் முதலியன மெய்யுணர்வு நாவுணர்வுகளோடு முகர்ந்து பொருள்களை அறியும் மூக்குணர்வையும் பெற்ற மூவறிவுயிர்களாகும். நண்டு தும்பி வண்டு தேனீ முதலியன மெய், நா, மூக்கு அறிவுகளோடுகண்ணால் பொருள்களை அறியும் காணும் உணர்வினையும் பெற்ற நாலறிவுயிர்களாகும். விலங்குகளும் பறவைகளும் மெய், நா, மூக்கு கண் உணர்வுகளோடு அழைத்தால் கேட்கும் செவியறிவையும்பெற்ற ஐந்தறிவுயிர்களாகும். மனிதன் மேற்கூறிய ஐந்தறிவுகளோடு ஆறுவது அறிவாக் எண்ணப்படும் மன உணர்வையும் பெற்றுள்ளமையால் மனிதன் என்று பெயர் பெற்று உயிரினங்கள் எல்லாவற்றிலும் மேலாக மதிக்கப் பெறுகின்றான்.

**உயர்ந்த மனிதன் :**

நல்லன தீயனவற்றை அறிந்துணரும் ஆற்றல் பெற்றுள்ள மனிதன், தனக்கு வாழ்த்த வாயையும் நினைக்க நெஞ்சையும் தாழ்த்தச் சென்னியையும் தந்துள்ள இறைவனை உணர்ந்து வழிபட்டு உய்யும் நெறியை மானுடப்பிறப்பின் பயனாகப்பெறும்

போதுதான் உயர்ந்த நிலையைப்பெறுகின்றான். அப்பர்சுவாமிகள் இறைவனை வழிபடுவதற்கே இப்பிறவி வாய்த்துள்ளது என்ற உண்மையை,

"குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண் ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

என்று அருளிச்செய்கின்றார்.

உலக வாழ்க்கையில் ஆன்மீக ஈடேற்றத்திற்குரிய முயற்சிகள் எதையும் மேற்கொள்ளாது வாழ்நாளை வீண் நாளாக்குவோர் பலர். அவர்கள் மேலும் பல பிறவிகளை மாறி மாறி எடுத்து இறந்தும் பிறந்தும் வாழும் பிறவிச் சுழலிற் பட்டு அல்லல் உறுவோரே ஆவர்.

உய்தி உண்டா ?

உலகில் அறுபதாண்டுகளைப் பயனின்றிக் கழித்த ஒருவர் அப்பரடிகளைச் சந்தித்தார். 'அப்பர் பெருமானே! இப்பிறப்பில் அடியேனுக்கு உய்தி கிடைக்குமா? இறந்த பிறகு எனக்கு வீடு பேறு கிட்டுமா? கூறியருளுங்கள்' என்று கேட்டார்.

அப்பரடிகள் அவரைப் பார்த்து, 'ஐயா! முதியவரே! இறந்த பிறகு உங்கள் உயிர் சுவர்க்கத்தை அடையுமா? அல்லது நரகத்தை அடையுமா? அல்லது வீடுபேற்றைப் பெறுமா? என்பதைக் கணித்தறிய உங்களிடம் ஐந்து கேள்விகள் கேட்க விரும்புகிறேன். அதற்கு நீங்கள் அளிக்கும் விடையை வைத்துக் கொண்டுதான் உங்கள் கேள்விக்கு விடை சொல்லவேண்டும்' என்று முதற் கேள்வியை முதியவரிடம் கேட்டார்.

'இறைவன் திரு நாமமாக விளங்கும் திருவைந்தெழுத்தை - பஞ்சாக்ஷரத்தை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எத்தனை முறை ஜபம் செய்திருப்பீர்கள்? என்பது முதற் கேள்வி.

அறுபதாண்டு உலகில் வாழ்ந்து கழித்த அம்முதியவர் அப்பரடிகளைப் பார்த்து, 'ஐந்தெழுத்தா! அது இன்னது என்பதையே இந்நாள்வரை அறியேன் ஐயனே! என்று விடை இறுத்தார்.

அப்பர் சுவாமிகள் சிந்தித்தார், 'ஒரு ஆசாரியனை அடுத்து பஞ்சாக்ஷர உபதேசம் பெற்று அதனை முறையாக ஒருவன் ஜபம் செய்வது அரிய செயலாகவும் இருக்கலாம். எல்லோரும் மேற்கொள்ளத்தக்க எளியசெயலாகவே மற்றொன்று கேட்போம்' என்று திருவுளத்து எண்ணி, அடுத்த கேள்வியைக் கேட்டார்.

'இறைவனது அளவற்ற ஆற்றலையோ, அல்லது அவன் உயிர்கட்கு வழங்கும் கருணையின் திறத்தையோ வியந்தும் புகழ்ந்தும் மற்றவர்களிடம் உரையாடியது உண்டா? என்பது இரண்டாவது கேள்வி.

'அடிகளே! இந்நாள்வரை பயனின்றிப் பேசிப் பொழுது கழித்தேனேயொழிய இறைவன் புகழை வாழ்த்தியோ அவன் திறம் விரித்தோ யாரிடமும் எதுவும் பேசியதில்லை' என்று இரண்டாவது கேள்விக்கு விடையிறுத்தார் முதியவர்.

'நாடோறுமோ அல்லது வாரம் ஒரு முறையோ அல்லது திருவிழாக்காலங்களிலோ திருக்கோயிலுக்குச்சென்று இறைவனை வழிபாடு செய்ததுண்டா? என்று மூன்றாவது கேள்வி கேட்டார் அப்பர்.

'திருக்கோயில் எங்கள் ஊருக்கு நடுவில் இருக்கிறது. ஆறுகாலம் வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஆலயமணி, பூசை வேளைகளை ஊர் மக்களுக்கு இடைவிடாமல் தெரிவிக்கவும் செய்யும். அப்படியிருந்தும் ஒருநாளும் திருக்கோயிலுக்குள் போய் வலம் வந்து வழிபடவில்லை சுவாமி' என்றார் கிழவர்.

'வீட்டிலாவது ஒரு தெய்வத் திருவுருவமோ படமோ வைத்து வழிபாடுசெய்து வருகின்றீரா? நீராடிஉண்பதற்குமுன் மலர் பறித்துச் சாத்தி வழிபட்டு உண்பதுண்டா? என்று கேட்டார் அப்பர் சுவாமிகள்.

நான்காவது கேள்விக்கும் இல்லை என்றே பதில் இறுத்தார் முதியவர்.

அப்பரடிகள், 'இந்தக் கேள்விக்காவது சிந்தித்து நல்ல விடை சொல்லுங்கள்' என்று கூறி அடுத்த கேள்வியைக் கேட்டார்.

சைவர்களாக இருப்பவர் எல்லோரும் நாடோறும் திருவெண்ணீறு அணியத் தவறமாட்டார்களே. திருநீற்றின்

பெருமையையோ அணிவதற்குரிய காரணத்தையோ அறியாதவர்கள் கூடத் திருநீறு உடலில் உள்ள பலவகை நோய்களையும் போக்கவல்லது என்பதை அறிந்து திருநீறு பூசுவார்கள் ஆதலின் இம்முதியவர் நிச்சயம் திருநீறு அணிபவராக இருக்கலாம் என்று திருவுளத்தெண்ணி, ஐந்தாவது கேள்வியையும் எழுப்பினர்.

' நாடோறும் நீராடிய பின்னர் திருநீறு அணிவதுண்டா? என்பதுதான் ஐந்தாவது கேள்வி.

அதற்கும் அம்முதியவர் ' இல்லை ' என்றே பதில் கூறினர்.

அப்பரடிகள் அம்முதியவர்மேல் இரக்கப்பட்டார். இப்பெரியவர் தன் வாழ்க்கையில் இறைவனது கருணையை இழந்து விட்டாரே என்று உளங்கசிந்தார். இவர் நோய்கள் பலவும் நலியப் பிறப்பு இறப்பு என்னும் சுழலிற்பட்டு இன்னும் பலகாலம் பிறந்திறந்து வாழும் நிலையினைப் பெற்றுவிட்டாரே என்று இரங்கினர். முதியவரை விளித்து எஞ்சிய வாழ்நாளிலாவது கடவுள் வழிபாட்டைச் செய்தால் நற்கதி பெறலாம் என்று அறிவுரை கூறி அனுப்பியருளினர். இக்கருத்துக்களை அப்பர் அருளிய திருத்தாண்டகத்தால் அறியலாம்.

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருநாளும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோஎன்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.

பிறவியற :

இவ்வைந்து கேள்விகளையும் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்டுக்கொள்ள வேண்டும். கடவுள் வழிபாட்டைத் தங்கள் கடமைகளில் ஒன்றாகக்கருதி வாழ்பவரே பிறவாநெறியாம் பேரின்ப வாழ்வு பெறுவர். இறைவன் திருவடிகளைச் சிந்திப்பதும், அவன் எழுந்தருளிய திருக்கோயில்களை வழிபடுவதும், ஆசையை அகற்றி வாழ்வதுமே பிறவியறுதற்குரிய வழிகளாகும் என்பதை அருணகிரிநாதரும்,

ஒருபொழுதும் இருசரண நேசத்தேவைத் — துணரேனே
உனதுபழநி மலையெனும் ஊரைச்சேவித்து — அறியேனே
பெருபுவியில் உயர்வரிய வாழ்வைத்தீரக் — குறியேனே
பிறவியற நினைகுவன் என் ஆசைப்பாடைத் — தவிரேனே.

என்று அருளிச்செய்கின்றார். ஆசையறுதற்குரிய எளியவழி பற்றற்றஇறைவன் திருவடிகளின்மீது பற்றுக்கொள்வதேயாகும் என்பார் திருவள்ளுவர்.

" பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. "

அன்பர்கள் அனைவரும் இறைவன் திருவருட்பேற்றை எய்துவதற்குரிய வழிபாடுகளை நியமமாகச்செய்து, இம்மையின்பங்களையும் என்றும் வற்றாமுற்றாப் பேரின்பப் பெறுவாழ்வினையும் பெற்றுச் சிறக்கச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

" சிந்தனை செய்ய மனம் அமைத்தேன் செப்ப நாஅமைத்தேன்
வந்தனை செய்யத் தலைஅமைத்தேன் கை தொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்தேன் மெய் அரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி ஈசற்கு இவை யான் விதித்தனவே. "

---

அட்டைப்பட விளக்கம் :-

## சங்காபிஷேகச் சிறப்பு

சிவபெருமான் அபிஷேகப்பிரியர். அபிஷேகத்தில் சிறந்தது அமிர்தாபிஷேகம். அதனிலும் சிறந்தது சங்காபிஷேகம். திருக்கடவூரில் பெருமானே அமிர்தலிங்கமாக இருப்பதால் அவருக்குச் சங்காபிஷேகமே சிறந்தது. மூலிகைவகை, பழவகை, மண்வகை, உலோகவகை மருந்துவகை முதலிய 300 பொருள்களுக்குமேல் சங்கு திரவியமாகச் சேர்த்து வேள்வியியற்றி பூர்ணாகுதியுடன் கார்த்திகை மாதச் சோமவாரந் தோறும் மாலை 7 மணி அளவில் சங்காபிஷேகம் கொள்கிறார் அமிர்தகடேசுவரர். இந்த அபிஷேகம் சரபோஜி மகாராஜா தனது மகோதரவியாதி நீங்கச் செய்ததாகச் செவிவழிச் செய்தி. இந்த முறையில் 1008 சங்காபிஷேகம் நடைபெறுவது அமிர்தலிங்கத்திற்கே உரிய தனிச் சிறப்பு.

# கோயிலில் சிந்திய குருதி

## குடவாயில், திரு. பாலசுப்பிரமணியன்.

தமிழக வரலாற்றில் திருக்கோயில்கள் எல்லாம் இறைவழிபாட்டின் உறைவிடங்களாகமட்டுமின்றி நாட்டு நிர்வாகம், சமுதாயநலன் இவைகளின் கேந்திரங்களாக விளங்கின. தனி மனித வாழ்வின் எல்லா அம்சங்களுடனும் தொடர்பிருந்த இத் திருக்கோயில்களைச் சிறப்புறப் பராமரிப்பதற்காக மன்னர்களும் மக்களும் பற்பல அறக்கட்டளைகளை ஏற்படுத்திப் பேணிக் காத்தனர். இத்தகைய அறக்கட்டளைகள் எக்காலத்தும் எல்லா மக்களுக்கும் பயன்பட விரும்பிய பெருமன்னர்கள் சந்திர சூரியன் உள்ளவரை - இவை அழியாமல் பேணிக் காக்க அவற்றைத் திருக்கோயில்களின் சுவர்களிலெல்லாம் கல்வெட்டுக்களாக வெட்டுவித்ததோடுமட்டுமின்றி - பின்னுல்வரும் மக்களும் இதனைக் காக்க - பல்வகையான வேண்டுகோள்களையும் கல்வெட்டுக்கள்மூலமாகவே விடுத்தனர். அவர்களுக்குப் பின்னும் இத்தகைய அறக்கட்டளைகளைத் தன்னுயிர் ஈந்து காத்த அறச் செம்மல்கள் தமிழகத்தில் இல்லாமல் இல்லை.

பாண்டிய மன்னர்களிடம் - அரசனுக்காக - எந்த நேரமும் உயிரைத் தியாகம்செய்ய - தயாராய் ஒருமைப்பட்டிருந்த "ஆபத்துதவிகள்" என்ற ஏவலாளர்கள் இருந்தனர். பிற்காலத்தில் கூட உலக வரலாற்றில் "தற்கொலைப் படையினர்" என்ற ஒரு பிரிவினர் போர்க்காலங்களில் பயன்படுத்தப்பட்டனர் என்பதை அறிகிறோம். இதேபோன்று தமிழக வரலாற்றில் - அறக்கட்டளைகளுக்கு - ஊறுவந்தபோது - தன் உயிரைத் தியாகம் செய்து அறங்காத்த நிகழ்ச்சிகள் சில கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் மாயூரத்திலிருந்து ஆறுகல் தொலைவில் உள்ள புன்செய் என்ற ஊர் சோழர்கள் காலத்தில் ஆக்கூர் நாட்டில் ஒரு 'பிரமதேய' கிராமமாக இருந்தது. இங்கே "நல்துணைஈஸ்வரம்" என்றும் "திருநனிபள்ளி உடையார்கோயில்" என்றும் அழைக்கப்பட்ட ஒரு சிவன்கோயில் உள்ளது. இவ்வூர், அடுத்த ஊராகிய தலைச்செங்காட்டுக் கிராமச் சபையினர் மேற்பார்வையில் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அக்காலத்தில் இவ்வூரில் இருந்த நான்குபேர்கள் கோயில் நிலங்கள்

சிலவற்றைத் தம்முடையது என்று பொய்யுரிமைகொண்டாடினர். இவை கோயிலுக்குரியதுதான் என்பதை உலகிற்கு மெய்ப்பிப்பதற்காக, "திரிசூல வேலைக்காரர்" என்ற சிவனடியார் இனத்தைச் சேர்ந்த சிலர் தீ மூட்டி அத்தீயில் வீழ்ந்து தம் உயிரைத் தியாகம் செய்தனர். இதையுணர்ந்த திருச்செங்காட்டு ஊர்ச்சபையினர் பொய்யுரிமை பாராட்டிய நால்வரும் தம் நிலத்தைத் திரும்பக் கோயிலுக்கு வழங்குவதோடு உயிரைத் தியாகம் செய்த அச்சிவனடியார்களுக்கு உலோக படிமங்கள் அமைக்க இருநூறு காசுகளும் அப்படிமங்களுக்கு வழிபாடு நிகழ்த்த நன்கொடைகளும் வழங்குவதற்கு ஆணையிட்டு அவ்வாணையை நிறைவேற்றினர். இச் செய்தி அத்திருக்கோயில் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது.

சோழ மன்னர்கள் காலத்தில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சிகுறித்து ஒரு கிராமத்தில் பொய்யுரிமைகொண்டவர்களை எளிதாக ஊர்ச்சபையின் முன்னமோ அல்லது மன்னன் முன்போ எடுத்துக் காட்டி நீதி பெற்று இருந்திருக்கலாம். இருப்பினும் திரிசூல வேலைக்காரர்கள் உயிர்த்தியாகம் செய்து, உலகிற்கே ஒரு பாடமாக அமையும்படி செய்த அவர்களின் தியாகம் பெரிதும் போற்றுதற்குரிய ஒன்றாகும்.

திரிசூல வேலைக்காரர்களைப் போன்றே பிற்காலத்தில் அறங்காக்க உயிர்த் தியாகம் செய்தனர் பலர். அவ்வரிசையில் ஸ்ரீரங்கம் கோயிலில் தெற்கு வாசல் இராஜகோபுரம் (வெள்ளைக் கோபுரம்) கீழ்ப்புறத்தில் உள்ள ஓர் உருவச்சிலையும், அதன் கீழ் கல்வெட்டில் காணப்படும் செய்திகளும் மனத்தை உருக்கும் நிகழ்ச்சியாகும்.

அழகிய மணவாளதாசன் என்பவருக்கு நிர்வாகியாகப் பணியாற்றிய அப்பாவய்யங்கார் என்பவர் ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாத சுவாமிக்குத் திருவமுது செய்விக்கப்படாமலும், பூஜைகள் மற்றும் அறச் செயல்கள் நடத்தப்பெறாமலும் பல அநியாயங்கள் நடப்பதைக்கண்டு வெகுண்டு எழுந்தார். இவ்வநியாயங்களை உடனடியாகப்போக்க வெள்ளைக் கோபுரத்தின் உச்சி மீது ஏறி கீழே விழுந்து, தன் உயிரைத் தியாகம் செய்தார். இதன்பின் பூஜைகளும் அறக்கட்டளைகளும் சரிவர நடந்ததோடன்றி, அரங்கப் பெருமானின் திருவடிகளை அடைந்த அப்பாவய்யங்காரின் தியாகத்தின் நினைவாக ஆலயத்திற்குச் சில தர்மங்களும் ஏற்படுத்தப்பட்டு, அக்கோபுரத்திலேயே "ஸ்ரீரங்கநாத சுவாமிக்கு அமுது செய்வதற்கு ஒன்றும் நடப்பிவையாமல் அநியாயம்

பண்ணுகிறபோது இந்தக் கோபுரத்தின் மேலேயிருந்து கீழே விழுந்துபரமபதத்துக்குப்போனவர் ஸ்ரீகாரியம் அப்பாவய்யங்கார் என்ற கல்லெழுத்து வரிகளுடன் அவரது உருவச் சிலையும் உள்ளது. அதனருகில் சௌமிய வருஷம் தை மாதம் என்று எழுதப்பட்ட அப்பாவய்யங்கார் உயிர் நீத்த நிகழ்ச்சியும் பின்பு செய்யப்பட்ட அறக்கட்டளைகள் பற்றிய செய்திகளும் அடங்கிய கல்வெட்டு ஒன்று இன்றளவும் உள்ளது.

இவ்வாறு வியக்கத்தக்க உயிர்த் தியாகங்கள் செய்து அறம் பிழைக்க, திருக்கோயில்களைப் பேணிக்காத்த நமது முன்னோர் களின் தொண்டு என்றும் நிலைத்து இறவாத புகழ் உடையது. அந்தப் பழமையும், கலைச் சிறப்பும், கல்வெட்டுக்களின் விந்தை விளக்கங்களும் என்றென்றும் பாதுகாக்கப்படவேண்டிய பணி களில் தலைசிறந்ததாகும்.

நன்றி! — தினமணி, 10—11—77.


# குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீகாசி மடத்து முதல்வருமான ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப் பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத் துடன் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ் இதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா ரூ. 7—00

விலாசம் :— கௌரவ நிர்வாக ஆசிரியர்,
உயர்திருவாளர். கே. சுப்பிரமணிய பிள்ளை.
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்,

# தீபாவளி

திருமுருக. கிருபானந்தவாரியார்.

தீபாவளி என்னும் நன்னாளைப் பொன்னாளாக யாண்டுங் கொண்டாடுகிறார்கள். ஆனால் அதன் உண்மையறிந்தவர்கள் ஒருசிலரேயாவார்கள். அதனைச் சிறிது இங்கு விளக்குவாம்.

பெரும்பாலோர், நரகாசுரனைக் கண்ணபிரான் சங்கரித்தார். அந்த அரக்கனை அழித்தநாளே தீபாவளி என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

நரகாசுரனைச் சங்கரித்தநாள் அதுவாக இருக்கட்டும். ஆனால் கேவலம் ஒரு கொடியவனைக்கொன்ற நாளுக்கு ஒரு கொண்டாட்டம் நிகழ்வது, யாண்டும் எக்காலத்தும் இருந்ததில்லை. அப்படி இருக்குமாயின் இரணியனைக் கொன்ற நாள், இராவணனைக் கொன்ற நாள், கம்சனைக் கொன்ற நாள், இடும்பனைக் கொன்ற நாள், துரியோதனனைக் கொன்ற நாள், அவ்வாறே அந்தகாசுரன், சலந்தராசுரன், இரணியாட்சன்; திருவனூர்த்தன் இப்படிப் புகழ்படைத்த அரக்கர்கள் ஒவ்வொருவரையும் கொன்ற நாட்களையெல்லாம் கொண்டாடுவதாயின், ஆயுளே அதற்குச் சரியாகிவிடும். ஆகவே, நரகாசுரனைக் கொன்றதற்காகத் தீபாவளி ஏற்பட்டதன்று.

தீபம் - விளக்கு; ஆவளி - வரிசை.

தீபத்தை வரிசையாக வைத்துச் சிவபெருமானை வழிபடுவதற்கு உரிய நாள், தீபாவளி என்று உணர்க. தீபமங்கள ஜோதியாக விளங்கும் சிவபெருமானை, நிரம்பவும் விளக்கேற்றி வழிபட்டார்கள் நமது முன்னோர்கள். திருக்கார்த்திகையில் விளக்கேற்றி வணங்குகின்றார்களன்றோ ?

" விளக்கிடு காணாதே போதியோ பூம்பாவாய் "

என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு.

சிவ விரதம் எட்டு எனக் கந்தபுராணத்தின் ஏழாவது காண்டமாகிய உபதேச காண்டம் புகல்கின்றது.

அவையாவன :—

(1) சோமவார விரதம்,

(2) உமாமகேச்சுர விரதம் (கார்த்திகை மாத பௌர்ணமி)

(3) திருவாதிரை விரதம் (மார்கழியில்)

(4) சிவராத்திரி விரதம் (மாசியில்)

(5) கல்யாண விரதம் (பங்குனி உத்திரம்)

(6) பாசுபத விரதம் (தைப்பூசம்)

(7) அஷ்டமி விரதம் (வைகாசி பூர்வபட்ச அஷ்டமியில்)

(8) கேதார மாவிரதம் (இதுதான் தீபாவளி)

இந்த விரதம் நோற்கும் முறை :

புரட்டாசி மாதம் பூர்வபட்சம் அஷ்டமியில் தொடங்குதல் வேண்டும். நிறைகுடம் வைத்து, அதில் சிவபெருமானை ஆவாகனம் செய்து, இருபத்தொரு இழையுடைய நூலைக் கையில் புனைந்து, அர்ச்சனை செய்து, தூப தீப நிவேதனம் புரிந்து வழிபடவேண்டும்.

ஐப்பசி மாத அமாவாசைக்கு முந்தின நாள் சதுர்த்தசியின்று, அதிகாலையிலெழுந்து நீராடி, தூய ஆடையுடுத்து, நெல்லின்மீது நிறைகுடம் வைத்து, அதில் சிவமூர்த்தியை நிறுவி, சிவமாகவே பாவனை புரிந்து, பக்தி பரவசமாக அர்ச்சித்துப் பாராயணம் புரிந்து, தூப தீப நிவேதனங்கள் செய்து வழிபடவேண்டும்.

மறுநாள் அமாவாசையன்று காப்பை அவிழ்த்துவிட்டு உணவருந்த வேண்டும். இந்த விரதம் கேதார விரதம் எனப்படும்.

பிருங்கி முனிவர் சக்தியை விலக்கிச் சிவபெருமானைமட்டும் வலம் வந்து வழிபட்ட காரணத்தினுல், உமாதேவியார் வெகுண்டு, இடப்பாகம் பெறும் பொருட்டு, திருக்கயிலாய மலையினின்றும் நீங்கி, கௌதம முனிவருடைய வனத்தை அடைந்தனர். அவ்வனம் அம்பிகையின் வரவினுல் மிகவும் செழிப்புற்றது. பாம்பும் தவளையும், அரவும் கீரியும், உரகமுங் கருடனும் உறவாடின.

கௌதமர், கௌரியைத் தொழுது துதித்தார். இந்தவிரதத்தைக் கௌதமர் கூற, விதிப்படி உமையம்மையார் நோற்று, இறைவருடைய இடப்பாகத்தைப் பெற்று மகிழ்ந்தார்.

கௌரி நோற்ற காரணத்தால் கேதார கௌரி விரதம் எனவும் இது பேர்பெற்றது.

இருபத்தொருநாள் அனுஷ்டிக்க முடியாதவர்கள், ஐப்பசி தேய்பிறைச் சதுர்த்தசியன்றுமட்டும் மேற்கூறிய முறைப்படி அனுஷ்டிக்கவேண்டும்.

இவ்விரதத்தை எல்லோரும் மேற்கொண்டு, அன்று சிவமூர்த்தியை வழிபட்டு நலம் பெறுதல் வேண்டும். தீபங்களை வரிசையாக ஏற்றி அன்புடன் வழிபடவேண்டும்.

தீபாவளியன்று மது மாமிசங்களையுண்டு களியாட்டம் களிக்கின்ற மாந்தர் பெரும் பாவத்திற்கு ஆளாவர். இனியேனும் அந்தத் தீயநெறியைக் கைவிட்டுத் தூய நெறி நின்று நலம் பெறுவார்களாக.

நன்றி !

— இராமகிருஷ்ண விஜயம், நவம்பர் - 1977.

---

## பார்வையாளர் குறிப்பு

### திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்


### சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

மிகச் சிறந்த முறையில் பேணிக்காக்கப்படும் இக்கோயிலைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தோம். எல்லாம் வல்ல இறைவன் திருவருள் திருஞானசம்பந்தப் பெருந்தகை நினைவூட்டும் திருத்தலம் காணக்கிடைத்தது பெரும் வாய்ப்பு.

(S-d) A. V. PADMANABAN,
Manager
Karur Vysia Bank Ltd, Madras - 1

1—11—77.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்
நவராத்திரி நிறைவுநாள் விழா



வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளும்
விழாச் சொற்பொழிவாளர் ஸ்ரீ கருமாரிதாசர் அவர்களும்
அப்பர் குருகுல மாணவர்களும்.*

---

* சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில், 19—8—1977 அன்று இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர், திரு, M. K. பாலசுப்பிரமணியம் I. A. S. அவர்களால் 'சச்சிதானந்தம் பிள்ளை சதாபிஷேக நினைவு அப்பர் குருகுலம்' தொடங்கிவைக்கப்பெற்றது அனைவரும் அறிந்ததே. அப்பர் குருகுலத்தில் உணவு உறையுளுடன் குருகுலவாசம் செய்யும் இராமகிருஷ்ண உயர்பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்கள் இந்நிழற்படத்தில் உள்ளனர்.

இடமிருந்து வலமாக :—

1. சங்கரமகாராசன் VI Std.
2. வாசுதேவன் VII Std.
3. செந்தில்குமார் VII Std.
4. கோவிந்தராசன் IX Std.
5. கார்த்திகேயன் VII Std.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான

# திருபுவனம் ஸ்ரீகம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

ஸ்ரீ சரபமூர்த்திக்கு

# சரப வேள்வியும் கோடியருச்சனையும்

ஆணவத்தால் தானே பரம்பொருள் என்று செருக்குற்ற இரணியனைத் திருமால் நரசிங்க வடிவங்கொண்டு அழித்து அவனது குருதியைக் குடித்தார். அதனால் மதங்கொண்டு உலகிற்குத் துன்பம் விளைத்த நரசிங்கத்தை அடக்குவதற்குச் சிவபெருமான் எடுத்தவடிவமே சரபத்திருவுருவம். இவர் திருபுவனம் திருக்கோயிலில் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள் வழங்குகின்றார். சரபமூர்த்தி, பல குடும்பங்களுக்குக் குலதெய்வமாகவும் திகழ்கின்றார். இப்பெருமானை ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பாக இராகுகால வேளையில் வழிபட்டுப் பலர் பயன்பெறுகின்றனர்.

ஸ்ரீ சரபமூர்த்தியை நினைப்பவர்களும், வழிபடுபவர்களும் பகை நீக்கமும், பாபக் கழிவும் பெறுவதோடு அரசர்களால் ஏற்படும் துன்பம், அகாலமரணம், வலிப்புநோய், சுரநோய், எதிர்பாராத விபத்து இவை நீங்கப்பெறுவர். இம்மை மறுமை இன்பங்களையும் வெற்றியையும் எய்தி இன்புறுவர் என்று சரப கல்பம் கூறுகிறது.

உலகில் பகையும் பிணியும் நீங்கி வசியும் வளனும் சுரக்கவும் போர்க்குமுறல் அடங்கி அமைதி நிலவவும் தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சரபப் பெருமானுக்கு 2-9-73 இல் கோடி அர்ச்சனை தொடங்கியருளினார்கள். கோடியர்ச்சனையில் நாற்பத்தொன்பதாவது லட்சார்ச்சனை நடைபெறுகிறது. இவ்வர்ச்சனையில் அன்பர்கள் பலர் பங்கு கொண்டு பயன் பெற்று வருகின்றனர்.

லட்சார்ச்சனை, சரபவேள்வி, ஜபம் முதலியவற்றில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் ஒருவாரத்திற்கு முன்னதாகத் தெரிவித்துக் கலந்துகொண்டு வழிபட்டு உய்வார்களாக.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ சரபவேள்வி ஜபம் முதலியவற்றிற்குக் கட்டணம் | | | ரூ. 250—00 |
| ஏகதின லக்ஷார்ச்சனை | 1-க்கு கட்டணம் | ... | ரூ. 500—00 |
| பஞ்சமுகார்ச்சனை | 1-க்கு கட்டணம் | ... | ரூ. 50—00 |
| சகஸ்ரநாமார்ச்சனை | 1-க்கு கட்டணம் | .... | ரூ. 10—00 |

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :— பொருளாளர் :- ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம் P. O. தஞ்சை மாவட்டம்.

# அன்பிலாலந்துறை - திருமாந்துறைத்
# தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்,
**வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம் ஏ.,**

## அன்பிலாலந்துறை

சோழவள நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் லால்குடிக்குக்கிழக்கே 5கிலோமீட்டர் தூரத்தில்கொள்ளிடத்தின் வடகரையில் அமைந்து விளங்குவது அன்பிலாலந்துறை. திருச்சிராப்பள்ளியிலிருந்தும் லால்குடியிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. அன்பில் என்பது ஊர்ப் பெயர். ஆலந்துறை கோயிற் பெயர்.

இக்காலத்தில் மக்கள் வாழும் வீட்டைக் குறிக்கும் இல் என்னும் சொல் பழமையான ஊர்ப் பெயர்களோடும் சேர்த்து வழங்கப்படுதலைக் காணலாம். அன்பில், பாச்சில், செந்தில், மைலாப்பில், இடைமருதில், புடைமருதில் முதலிய ஊர்ப் பெயர்கள் இல் என்ற முடிபுடைய ஊர்ப்பெயர்களாகும். இவற்றுள் இல் ஊர் என மாறி வழங்கக் காண்கிறோம். செந்தில் - செந்தூர் மைலாப்பில் - மைலாப்பூர், இடைமருதில் - இடைமருதூர் என வழங்கப்படுகின்றன.

அன்பிலாலந்துறை காவிரி வடகரைத் தலங்களில் 57 ஆவது தலமாகும். இது கீழன்பில், மேலன்பில் என இரு பிரிவுடையது. கீழன்பிலில்தான் கோயில் உள்ளது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய இரண்டு திருப்பதிகங்களைப் பெற்று விளங்குகிறது இத்தலம்.

**கோயிலமைப்பு :**

லால்குடியிலிருந்து செங்கரையூருக்குச் செல்லும் பேருந்துச் சாலையில் இத்தலம் உள்ளது. திருச்சிராப்பள்ளியிலிருந்து

நகரப் பேருந்துகளும் இத்தலத்திற்குச் செல்கின்றன. கொள்ளிடக்கரையில் சாலைக்கு வடக்கே கோயில் உள்ளது. கோயிலை அடையுமுன் இத்தலத்தின் தலமரமாகிய ஆலமரமும் அதன் கீழ்ச் சிவலிங்கமூர்த்தியும் அன்பர்கள் பலரது அபிமானக் கடவுளாய் விளங்கும் விநாயகரும் திருக்கோயில் கொண்டுள்ள தனி ஆலயம் கோயிலுக்குத் தெற்கே விளங்கக் காண்கிறோம். அதை அடுத்து புகழ்பெற்ற அன்பில் கோயில் திகழ்கிறது. பழமையான 5 நிலைக் கோபுரம் கோயிலின் முகப்பை அணி செய்கிறது. உள்ளே செல்லும்போது நடைபாதையின் இரு மருங்கிலும் நந்தவனமும் பூஞ்செடிகளும் அழகோடு பொலிகின்றன. கோபுரத்தை அடுத்துக் கோயிலின் தென்புறத்தில் கோயில் அலுவலகம் விளங்குகிறது. வடபுறம் இக்கோயிலின் முக்கிய தீர்த்தமாகிய சந்திரபுஷ்கரணி பெரிய கிணறுவடிவமாக அமைந்துள்ளது. இரண்டாம் கோபுரம் பஞ்சமூர்த்திகளின் சுதைச் சிற்பங்களோடு விளங்கும் கட்டைக் கோபுரமாகும்.

அதை அடுத்து உள்ளே சென்றால் நாட்டுக்கோட்டை நகரத்தாரின் நவீனத் திருப்பணியோடு அன்பில் கோயில் அழகுறத் திகழ்தலைக் காண்கிறோம். கோயில் திருப்பணி முழுமையாக நிறைவேறுவதற்குள் திருப்பணி நிறுத்தப் பெற்றதால் பரிவார தெய்வங்களின் கோயில்கள் அமைக்கப் பெறவில்லை; பிராகாரத்தில் ஒரே மண்டபத்தில் வரிசையாகப் பரிவார தெய்வங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இரண்டு பிராகாரங்கள் உள்ளன. வெளிப் பிராகாரத்தில் நந்தவனம் உள்ளது. உட்பிராகாரத்தில் உள்ள மண்டபத்தின் கன்னிமூலையில் விநாயகரும் சப்த கன்னியரும் உள்ளனர்.

திருஞானசம்பந்தப் பெருமான் இத்தலத்திற்கு எழுந்தருளிய போது கொள்ளிடம் நீர்ப் பெருக்காய் இருந்ததாகவும், தென் கரையிலிருந்தே பாடியதாகவும் இறைவன் ஆணையின்வண்ணம் விநாயகர் காதைச் சாய்த்துக் கேட்டதாகவும் ஒரு செவிவழிச் செய்தி கூறப்படுகிறது. இதற்கேற்ப விநாயகர் இத்தலத்தில் தலவிநாயகருக்கு அடுத்த நிலையில் செவிசாய்த்த விநாயகர் என விளங்குகின்றார். இவ்விநாயகர் திருவுருவம் செவிசாய்த்து முடியசைத்து நிற்கும் நிலையில் விளங்குகிறது. அதைத்தொடர்ந்து முருகன் மற்றும் பரிவார மூர்த்திகள் விளங்குகின்றனர். கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தியும் மேற்கில் திருமாலும் வடக்கில் நான்முகனும் உள்ளனர். சண்டிகேசுவரர் கோயிலை அடுத்து வடபால் அம்பாள் கோயிலும் கிழக்குநோக்கித் திகழ்கிறது. அக்கோயிலையும் வலம்வந்து நவக்கிரகங்கள் நால்வர்

சந்நிதிகளைத் தரிசித்து ஆலயத்துக்குள் செல்லலாம். நந்தி பலி பீடங்களை அடுத்து விநாயகர் உற்சவமூர்த்திகளை வழிபட்டுக் கொண்டு இறைவன் சந்நிதியை அடைகிறோம். சுவாமி பிரம புரீசுவரர், சத்யவாகீசர் எனவும் வழங்கப்படுகிறார்.

" செடியார் தலையில் பலிகொண்டு இனிதுண்ட
படியார் பரமன் பரமேட்டிதன் சீரைக்
கடியார் மலரும் புனல்தூவிநின் றேத்தும்
அடியார் தொழும் அன்பிலாலந் துறையாரே.

என்று ஞானசம்பந்தர் பாடிய தேவாரத் திருப்பாடலை ஓதி வழிபட்டு வெளியே வருகின்றோம். வலமாக அம்பாள் சௌந்தர நாயகி சந்நிதியை அடைகின்றோம். அம்பிகை, பெயருக்கு ஏற்றபடி அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாகத் திகழ் கின்றாள். வழிபட்டுக்கொண்டு மீள்கிறோம்.

## தலப்பெருமை:

பிரமதேவர் வாகீசமுனிவர் முதலியோர் பூசித்ததலம். சத்திய லோகவாசியாகிய பிரமனும் வாகீசரும் வழிபட்ட காரணத்தினால் இறைவன் ஸ்ரீ சத்தியவாகீசர் எனப்பட்டார் போலும்! சுவாமி பிரமபுரீசுவரர் எனவும் வழங்கப்படுகின்றார். அம்பிகை சௌந்தர நாயகி. தலமரம் – ஆல். தீர்த்தம் – கொள்ளிடம், சந்திர புஷ்கரிணி. கோயிலின் புறச்சுவர்களில் நான்முகன், அம்பிகை, முருகன் முதலியோர் இறைவனைப் பூசிக்கும் சிற்பங்கள் செதுக்கப் பெற்றுள்ளன. இத்தலத்திற்கு வடக்கே மூன்று கிலோமீட்டர் தூரத்தில் ஆனய நாயனார் வாழ்ந்த திருமங்கலம் என்ற ஊர் உள்ளது.

## கல்வெட்டுக்கள் :

இத்தலத்தைப்பற்றியனவாக 1902-ல் படியெடுக்கப்பட்டவை பதின்மூன்று கல்வெட்டுக்களும், 1938ல் எடுக்கப்பட்டவை ஆறும் உள்ளன. அவற்றில் ஏழுகல்வெட்டுக்கள் திருமால் கோயிலில் உள்ளவை. ஏனையவை சத்தியவாகீசர் கோயிலில் உள்ளவை. கல்வெட்டுக்களில் இறைவன் பெயர் பிரமபுரீசுவரர் என வழங்கப் படுகிறது. மாறவர்மன் குலசேகர பாண்டியன், மூன்றும் இராஜேந்திரசோழன், ஹொய்சள வீரராமநாததேவர், மதுரை கொண்ட பரகேசரிவர்மன், இராஜராஜதேவன் முதலியவர்கள் காலத்தனவாகக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை யெல்லாம் பெரும்பாலும் நிபந்தம் அளிக்கப்பெற்றமையை அறிவிக்கின்றன.

# திருமாந்துறை

சோழவள நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் லால்குடிக்கு மேற்கே 5 கிலோ மீட்டர் தூரத்தில் இத்தலம் உள்ளது. காவிரி வடகரைத் தலங்களில் 58-வது தலம். லால்குடி திருச்சி வழியில்–பெருஞ்சாலையில் இருத்தலின் இவ்விரு ஊர்களிலிருந்தும் பேருந்துகளில் சென்றால் இத்தலத்தை எளிதாக அடைந்து வழிபடலாம். புகை வண்டி நிலையமும் உண்டு. திருமாந்துறை என்ற பெயருடைய தலங்கள் இரண்டு உள்ளன. இத்தலம் வடகரைமாந்துறை என அழைக்கப்பெறும். காவிரிக்குத் தென்கரையில் கும்பகோணத்திற்கு அருகில் திருமங்கலக்குடிக்கு அண்மையில் ஒரு மாந்துறை உண்டு. அது வைப்புத்தலம். வடகரை மாந்துறையே பாடல் பெற்ற தலமாகும். திருஞான சம்பந்தர் பாடிய ஒரு திருப்பதிகத்தை இத்தலம் பெற்றுள்ளது. இப்பதிகப் பாடலில் " வடகரை மாந்துறை " எனக் குறிப்பிட்டு ஞானசம்பந்தர் பதிகம் அருளிச் செய்துள்ளார். திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார்,

" கஞ்சனூர் ஆண்டதம் கோவைக்
கண்ணுற் றிறைஞ்சி முன்போந்து
மஞ்சணி மாமதில் சூழும் மாந்துறைவந்து வணங்கி
அஞ்சொல் தமிழ்மாலை சாத்தி "

என்னும் பாடலால் தென்கரைத் திருமாந்துறை இறைவற்குத் திருஞானசம்பந்தர் தமிழ்மாலை சாத்தினர் என அறிகிறோம். அப்பதிகம் கிடைக்கவில்லை.

## கோயிலமைப்பு :

பெருஞ்சாலையை அடுத்துக் கோயில் கிழக்குநோக்கி அமைந்துள்ளது. கோயில் வாயிலில் நந்தி பலிபீடங்கள் உள்ளன. கோபுரத்திற்கு முன்னால் கருப்புச்சாமி எனப்பெறும் கோயில் காவல்தெய்வம் விளங்குகிறது. கோபுரம் மூன்று நிலைகளோடு கூடியது. கோயில் அண்மையில் திருப்பணிகள்செய்விக்கப்பெற்று மகா கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெற்ற புதுப்பொலிவுடன் திகழ்கிறது. கோபுர வாயிலைக் கடந்தவுடன் பிராகாரம் உள்ளது. பிராகாரத்தை வலம் வருவோம். வடபுறத்தில் இத்தல மரமாகிய மாமரம் உள்ளது. கன்னி கோயில் அதையடுத்து விநாயகர், முருகன் பழனியாண்டவர் திருமகள் கோயில்கள் உள்ளன. வடபுறம் சண்டேசுவரர் கோயில் உள்ளது. கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தி மேற்கே மகாவிஷ்ணு, வடக்கே பிர்மா அதை அடுத்து துர்க்கை ஆகிய தெய்வங்கள்

விளங்குகின்றன. பிராகாரத்தின் கீழ்ப்புறம் தனி மண்டபத்தில் நவக்கிரகங்களும் பைரவரும் உள்ளனர்.

கோயிலுக்குள் இரண்டாவது நிலைவாயிலில் தலஐதிகம் சிற்பமாக வைக்கப் பெற்றுள்ளது. மாமரத்தினடியில் விளங்கும் சிவலிங்கப் பெருமானை மிருகண்டு முனிவரும் மானும் பூசிக்கும் சுதைச்சிற்பங்கள் கருத்தைக் கவர்கின்றன. சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியும் அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியும் உள்ளன. தேவாரத் திருப்பதிகம் சலவைக் கல்லில் பொறித்து வைக்கப் பெற்றுள்ளது சுவாமிசந்நிதியில் உற்சவமூர்த்திகளும் நடராஜப் பெருமானும் உள்ளனர். சுவாமி பெயர் அருள்மிகு ஆம்ரவனே சுவரர். சுவாமி சந்நிதியில்,

"பெருகு சந்தனம் காரகில்பீலியும்
பெருமரம் நிமிர்ந்துந்திப்
பொருது காவிரி வடகரைமாந்துறைப்
புனிதன்எம் பெருமானைப்
பரிவினால் இருந்து இரவியும்
மதியமும் பார்மன்னர் பணிந்தேத்த
மருதவானவர் வழிபடும் மலரடி
வணங்குதல் செய்வோமே"

என்று ஞானசம்பந்தர் ஓதிய தேவாரத் திருப்பாடலை ஓதி வழிபடுவோம். அம்பாள் சந்நிதியை அடைகிறோம் அம்பாள் பெயர் அருள்மிகு பாலாம்பாள்.

"பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவாமுகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னையன்றி மற்றோர்தெய்வம் வந்திப்பதே"

என்ற அபிராமி அந்தாதிப் பாடலை ஓதி வழிபட்டு மீள்கிறோம்.

மூர்த்திகள் :

ஆம்ரம் - மாமரம். மாந்துறை வடமொழியில் ஆம்ரவனம் எனப்பெறும். மாந்துறையப்பர் ஆம்ரவனேசுவரர் எனப் பெறுவார். அம்பிகை அழகம்மையாவார். பாலாம்பிகை என அம்மை பெயர் வழங்கப்பெறுகிறது. தலமரம் - மா. தீர்த்தம் - காயத்ரிநதி.

தலப்பெருமை:

பிர்மானந்தபுரம், ஆம்ரவனம், மிருகதீர்த்தபுரம், மிருகண்டீசுவரபுரம், என்ற பல பெயர்களை உடையதாய் விளங்குவது இத்தலம். பிர்மாவினால் தன்னுடைய வேள்வி நிறைவின்

பொருட்டுக் கொண்டுவரப்பட்ட காயத்திரிநதி இத்தலத்தின் தீர்த்தமாகத் திகழ்கிறது. சுவாமி சுத்தரத்னேசுவரர், மிருகண்டீசுவரர், ஆம்ரவனேசுவரர் ஆகிய பெயர்களை உடையவர்.

மிருகண்டுமுனிவர் இத்தலத்தில் பலகாலம் தவம்செய்ததனால் மார்க்கண்டேயரைப் புதல்வராகப்பெற்றார் என்றும், பிர்மா ஒளி வடிவாக நின்ற பெருமானின் திருமுடியைக் கண்டதாகப் பொய் கூறியகுற்றம் இத்தலத்திறைவனை வழிபட்டதால் நீங்கியதென்றும் கூறப்படுகிறது.

அகலியையிடம் தவறாக நடந்துகொண்டதால் கௌதம முனிவரின் சாபத்திற்குள்ளாகி அங்கமெலாம் விகாரமாகி வருந்திய இந்திரன் இத்தலத்தை அடைந்து இறைவன் திருவருள் நலம் உற்றுச் சாப விமோசனம் பெற்றான்.

வேதமித்திரன் என்ற அந்தணன் தன் தந்தையின் அஸ்தியைக் கங்கையில் கரைக்கக் காசிக்கு எடுத்துச் செல்லும் வழியில் இத்தலத்தில் தங்கினான். அவன் உறங்கும்போது திருவருளால் அஸ்தி இரத்தினங்களாக மாறியது.

ககோள முனிவரின் மைந்தன் மருதாந்தன் சிறுவயதில் தந்தை தாயரைப் பிரிந்தான். கல்வியில் சிறந்து விளங்கிய அவன், தன் தாய் நெறிகெட்ட முறையில் தந்தையைப் பிரிந்து வாழ்வதை அறியாது அவளையே புணரும் கொடிய பாவத்தைச் செய்தான். உண்மை அறிந்து வருந்திய அவன் மாந்துறை இறைவனை வழிபட்டுக் கடுமையான விரதங்களை மேற்கொண்டு குற்றம் நீங்கினான். தனிக்கோயில் ஒன்றையும் கட்டி வழிபட்டான். அக்ரகாரம் ஒன்றையும் அமைத்தான். அதுவே அகரம் என வழங்கப்படுகிறது.

சூரியன் சந்திரன் இருவரும்வழிபட்டு, பகலுக்கும் இரவுக்கும் அதிபதியாகும் பேற்றைப்பெற்றனர். மருத்துக்களும் வழிபட்டுள்ளனர். இதனை இத்தலத் திருப்பதிகத்தின் ஆறாவது திருப்பாடலும் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு :

(22—234/27) சோழர் கல்வெட்டுக்கள் இரண்டு படியெடுக்கப்பட்டன. இராசராசன் பத்தொன்பதாம் ஆண்டு வானவ நாயக்கன் பெருந்திருக்குடிகள் வரிகொடுக்க முடியாது வெளியேறவே, மீண்டும் அவர்களை அங்கே குடிவைக்கப்பட்டமை தெரிவிக்கிறது. இராசராசன் பதினாறும் ஆண்டுக் கல்வெட்டு நந்தவனம் வைப்பதற்காகக் கொடுத்த நிலத்தின் வரியைத் தள்ளுபடிசெய்ததைக் கூறுகிறது.

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் சில அரிய சொல்லாட்சிகள்

புலவர், திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ.,

(மலர் 36. இதழ் 11. பக்கம் 542 - இன் தொடர்ச்சி)

வழிப்பறிச்சொல் இரண்டு :

அடிடா! பிடிடா! பாரத பட்டா! என்று ஒரு புராணப் பேச்சு வழக்கு நாம் அறிந்தது. சில தொழில் செய்யும்போது அவ்வாறு வரும் சில பொருளற்ற சொற்கள் அவ்வக் கூட்டத்தாரிடம் மட்டுமே காணப்பெறுவன. திருமுருகன் பூண்டியில் வழிப்பறியாளர்களைச் சந்தித்த அனுபவம் சுந்தரர்க்கு உண்டு.

> "கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
> விரவ லாமை சொல்லித்
> திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்
> டாற லைக்குமிடம் ... ..."

என அவ்வூரைப் படம் பிடிப்பர். இங்குவந்த "திடுகு" மற்றும் "மொட்டு" என்ற சொற்களுக்குப் பொருளேதும் இல்லை. ஆறலைப்பார், வழிப்போவாரை அதட்டி அச்சுறுத்தும் குறிப்புச் சொற்களாகவே இவை நிற்கின்றன. மகிழ்ச்சி, கோபம், அச்சம் முதலியவற்றில் பொருளற்ற சில சொல் வடிவங்களை ஒவ்வொரு கூட்டத்தாரும் உச்சரிப்பதை இன்றும் காணமுடிகிறது. ஒருக்கால் திருடு, வெட்டு என்பனதாம் ஆறலைக்கள்வரின் வாய்ச்சோர்வால் திடுகு, மொட்டெனத் திரிய வழங்கப்பெற்றனவோ! ஒப்பிட்டுப் பார்க்கலாம். எங்ஙனமாயினும் அச்சொற்களையும் நினைவோடு போற்றி ஆண்ட சுந்தரரின் பெருமை நெஞ்சில் விரிகிறது.

நொண்டி அல்ல நெண்டி :

"நெண்டிக் கொண்டேயுங் கலாய்ப்பேன்" என்ற திருவாரூர்த் தேவாரத்தில், நெண்டுதல் என்ற புதிய ஆட்சி காணப்படுகிறது. நெண்டுதல் என்பதற்கு உள்ளத்தில் கிளர்ந்தெழுதல் என்பது பொருளாகிறது. தானேயும் சென்று சண்டை

விடுவேன் என்பது தொடர்ப்பொருள். ஏதேனும் ஒன்றைப் பற்றி நின்று மீண்டும் மீண்டும் வாதிடுதலை "சும்மா நோண்டுகிறான்" என்று கூறுவதைக் கேட்கிறோம். நிண்டி நிண்டி வம்பளக்காதே என்ற ஆட்சியும் இன்று உண்டு. நோண்டுதல், நிண்டுதல் முதலிய சொற்களை ஓரளவு நெண்டுதலோடு ஒப்பிட இயலுகிறது.

## தமிழா? வடமொழியா?

மாத்தான் என்ற சொல் ஒன்று வலிவலம் தேவாரத்தில் ஆட்சிபெறுகிறது 'மாத்தானை மாத்தெனக்கு வைத்தானை - வலிவலந்தனில் வந்து கண்டேனே' என்பது அத்தொடர். மால் பிரமன் அறியாத மாத்தான் என்பதனால் பெரியவன் என்று பொருள் கொள்ள முடிகிறது. 'மகத்' என்னும் ஆரியச்சொல்லே மாத்து எனத் திரிந்து நின்றது என்று கூறுவர். மா என்ற சொல்லுக்கே பெருமை என்று பொருள் கூறுதல் கூடும். பெருந் தகுதியுடையவன் என்ற பொருளில் 'மாத்தகை' என்ற வழக்கு வருகிறது. தூய தமிழ் வடிவில் இச்சொல் பிறந்து வளர்ந்திருக்கலாம் என எண்ண இடமிருக்கிறது.

## மயக்கும் ஒரு சொல்:

திருக்கச்சிமேற்றளி இறைவனைத் துதிக்கும் சுந்தரர் இறைவனின் கருணைத் திறத்தை வியக்கும்போது,

'மோரூந் தோறொருகால் நினையா திருந்தாலும்
வேரூந் தென்னுள்ளம் புகவல்ல மெய்ப்பொருளே'

என்பர், 'மோரூந்து' என்ற சொல்வழக்குப் புதிதாகிறது. மாழாந்து என்பது போல் 'மோரூந்து' என்பதும் ஒருசொல் எனப் புதிதாக அறியமுடிகிறது. அறியாமையால் மயங்கி என்று முன்பின்னாகப் பொருள் கொள்ள இயலுகிறது. ஈடு உரையில் இச்சொற்கு அங்காந்து என்று பொருளுரைக்கப்படுகிறது. எனவே மறந்து அல்லது உறங்கி என்றும் பொருள் கொள்ள இயலுகிறது.

## புதுவழி கோலுக!

இவ்வாறெல்லாம் தேடினால் இன்னும் சில அரிய சொற்களையும் சுந்தரர் தேவாரத்தில் காணக்கூடும். புதிய கருத்துக்களுக்கும், பொருட்களுக்கும் புதிய சொல் தேடி அலைவதைவிட இவ்வாறான பழஞ்சொற்களை வெளிக் கொணர்ந்து புதிய நோக்கில் ஆள்வது மொழியியல் வளர்ச்சிக்கு உதவுவதோடு தொன்மை நூல் விளக்கத்திற்கும் வழிகோலும்.

# மெய்கண்ட நூல்கள்

( ஆராய்ச்சி முன்னுரை )

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.,

( மலர் 36, இதழ் 11, பக்கம் 558 இன் தொடர்ச்சி )

| அருளாளர்கள் | அருளிய நூல்கள் | காலம் |
|---|---|---|
| 1. திருவியலூர் உய்யவந்ததேவநாயனார் | 1. திருவுந்தியார் | கி. பி. 1148 |
| 2. திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார் | 1. திருக்களிற்றுப்படியார் | ,, 1178 |
| 3. மெய்கண்ட தேவநாயனார் | 1. சிவஞானபோதம் | ,, 1223 |
| 4. அருணந்தி சிவாசாரியார் | 1. சிவஞானசித்தியார் | ,, 1253 |
| ஷை | 2. இருபா இருபஃது | ,, 1254 |
| 5. மனவாசகங்கடந்த தேவநாயனார் | 1 உண்மை விளக்கம் | ,, 1255 |
| 6. உமாபதி சிவாசாரியார் | 1. சிவப்பிரகாசம் | ,, 1306 |
| ஷை | 2. திருவருட்பயன் | ,, 1307 |
| ஷை | 3. வினா வெண்பா | ,, 1308 |
| ஷை | 4. போற்றிப்பஃறொடை | ,, 1309 |
| ஷை | 5. கொடிக்கவி | ,, 1310 |
| ஷை | 6. நெஞ்சுவிடுதூது | ,, 1311 |
| ஷை | 7. உண்மைநெறிவிளக்கம் | ,, 1312 |
| ஷை | 8. சங்கற்ப நிராகரணம் | ,, 1313 |

## மெய்கண்ட நூல்களின் பொருளமைப்பு :

மெய்கண்ட நூல்கள் பதினான்கனையும் நான்கு வகையில் எண்ணலாம். 1. ஒன்றற்கொன்று விளக்கம் தந்து ஒத்தவகையில் அமைந்தவை. 2. வினாவகையிலும் வினாவிடை வகையிலும் அமைந்தவை. 3. மறுப்புவகையில் அமைந்தவை. 4. ஒவ்வொரு நோக்கில் அமைந்தவை.

1. ஒன்றற்கொன்று விளக்கம் தந்து ஒத்த வகையில் அமைந்தவை:—

இவ்வகையில் அமைந்த நூல்களை இரு திறனாகக் காணலாம். ஒன்று திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் ஆகும். இரண்டு சிவஞானபோதம், சிவஞானசித்தியார் — சுபக்கம், சிவப்பிரகாசம் என்பனவாகும்.

### 1. திருவுந்தியாரும், திருக்களிற்றுப்படியாரும் :

இவ்விரு நூல்களும் மெய்கண்டார் காலத்துக்கு முன் தோன்றியவை. இவ்விரு நூற் பெயர்களின் முன்னும் பின்னும் திரு, ஆர் என்னும் சிறப்பு அடை மொழிகள் உள்ளன. திருக்கோவையாரும் இச்சிறப்புக்குரியதாகும். உபதேச பரம்பரையில் வந்த இவ்விரு நூல்களும் ஒன்று ஒன்றற்கு விளக்கமாக அமைந்து நிற்கின்றது. 45 பாடல்களை உடைய திருவுந்தியாரின் கருத்தைத் திருக்களிற்றுப்படியார் 100 வெண்பாக்களால் விளக்கி நிற்கின்றது.

### பொதுநிலை :

சிவபெருமானே தவ முதிர்ச்சியால் பக்குவமடைந்த உயிர்களுக்குக் குருவாக எழுந்தருளி அருள்செய்வன். அத்தகைய திருவருளைப் பெற்றபின் உலகியல் வழிப்பட்ட பழக்கங்களினின்றும் விடுத்துத் திருவருள் வழிப்பட்ட பழக்கமே பழக்கமாகக் கோடல்வேண்டும். திருவருளால் பெற்ற இன்பம் மாற்ற மனங்கழிய நின்றது. இவ்வாறு அவன் உயிர்களுக்குச் சுரக்கும் தண்ணளியை அவனருளால் உயிர்கள் பெறலாமேயன்றி உயிரின் முனைப்பால் பெறமுடியாது. இறைவனை அடைதற்கு உரிய நெறிகளில் யோகநெறி என்பது ஒன்று. அது ஆதார யோகம், நிராதார யோகம் என இருவகைப்படும். உடலில் உள்ள ஆறு ஆதாரங்களில் ஒன்றில் இறைவனின் திருவுருவை எழுந்தருளுவித்துக்கொண்டு அப்பரம்பொருளை வழி

பட்டு வரும் ஞான முதிர்ச்சியால் ஒன்றுபடும் நிலை ஆதாரயோகம் எனப்படும். காலத்தொடு கற்பனை கடந்த பரம்பொருளே எல்லாப் பொருள்களினூடும் தோய்ந்தும் தோய்வற நின்றும் விளங்குகிறது என நினைந்து அப்பொருளுடன் ஒன்றுபடல் நிராதார யோகம் எனப்படும். யோகத்தின் பயனாக உடம்பினுள் உயிர்ப்புக் காற்றும் நாத கலையும் கூடிச் சுழுமுனை வழியாக உச்சியிற் சென்று அருள் வெளியை அடையும். அவ்விடத்து நிலை பெறுவோர் வீடுபேறு அடைவர். அவ்வருள் வெளியே இறைவனுக்குரிய இடமாகும். இத்தகைய வீடுபேற்றை அடைதற்கு உரிய தகுதியும் உரிமையும் உடையது உயிர். இதனிடத்து ஆணவமாகிய கொடி படர்ந்தமையால் உடம்பாகியபழம் பழுத்து விட்டது. அப்பழம், பிறவிக்குப் பகையாகும். ஆதலின் அதனை நுகர்வதை விடுத்துத் திருவருள் இன்பத்தைநுகரவும், அதற்குக் காரணமானவற்றைச் செய்யவும் தலைப்படல் வேண்டும். இக் கருத்துக்கள் இரு நூல்களினும் பொதுவாக விளக்கப்பட்டுள்ளன.

**தனி நிலை :**

திருவுந்தியார் :- உந்தீ பறத்தல் என்பது மகளிர் விளையாட்டு வகைகளில் ஒன்றாகும். பண்டைக் காலத்தே மகளிர் விளையாடும் பொழுதில் இறையருளை நினைந்தே விளையாடினர். "வண்டலம் பயில்வன வெல்லாம் வளர்மதியம் புனைந்த சடை, அண்டர்பிரான் திருவார்த்தை அணைய வருவன பயின்று" என வரும் திருத்தொண்டர் புராணத்தானும் திருவெம்பாவை, திருச்சாழல் முதலியவற்றானும் இவ்வுண்மை அறியப்பெறும். மகளிர் பலரும் சேர்ந்து உந்திப் பறவைகள் பறப்பதைப் போன்று கைகளை அசைத்து விளையாடும் விளையாட்டே உந்தீ பறத்தல் என்பதாகும். பெண்கள் விளையாடும் விளையாட்டு என்பதற்கேற்ப இந்நூலில் இரண்டாவதுபாடல் 'உழப்புவது என் பெணே' எனவுள்ளது அறியத்தக்கது. இவ்வாறு விளையாடுகின்றபொழுது உடலசைவு ஏற்படும். 'கொங்கை குலுங்க நின்று உந்தீபற', 'இளமுலை குலுங்க நின்று உந்தீபற' எனவரும் திருவாசகத் திருவுந்தியார்த் தொடர்கள் இவ்வுண்மையை விளக்கும். முதலிரண்டு அடிகளை ஒரு பெண் கூறுவாள். மூன்றும் அடியைப் பிறிதொருபெண் கூறுவாள். உந்தீபற என்னும் சொல் ஏனைய சொற்றொடர்களோடு தொடர்பின்றிப் புறத்துறுப்பாய் நிற்பதாகும். இவ்வகையில் அமைவதே இப் பாடல் முழுவதுமாகும். அரிய மெய்ப்பொருளை இவ்வினிய மகளிர் விளையாட்டின்மூலம் விளக்க முற்பட்டிருக்கும் ஆசிரியரின் திருவுள்ளம் எண்ணி மகிழ்தற்குரிய ஒன்றாகும். இவ்வாறன்றி

உந்தீபற என்பதை உம்+தீ+பற எனப்பிரித்து உமது பழமையாகவே குற்றங்களை விளைவித்துவரும் மும்மலங்களையும் உடல், உலகு, கரணங்கள் ஆகியவற்றையும் உம்மிடம் விட்டு நீங்குமாறு இஞ்ஞான நூலின் கருத்தையே கருத்தாகக்கொண்டு நிற்பாயாக எனத் தத்துவ உரை காண்டலும் பொருந்துவதாகும்.

இந்நூற்கண் அறியப்படும் உண்மைகள் பல. அவற்றுள் ஓரிரு உண்மைகள் ஈண்டுக் குறித்தல்தகும். உயிர் உடல் முதலிய கருவி கரணங்களைப்பெறுது ஆணவத்தோடுகட்டுண்ட நிலையைக் கேவல நிலை என்பர். உடல் முதலிய கருவிகளைப் பெற்று உலகில் வினைப்பயன்களை நுகரும் நிலையைச் சகல நிலை என்பர். வினை நீக்கம் பெற்று இறைவனின் அருட்பதிவால் உயிர் வீடுபேறடைந்து இன்புறும் நிலையைச் சுத்தநிலை என்பர். முதலிரு நிலைகளையும் விடுத்து உயிர் மூன்றும் நிலையைப் பெறுதற்கு உதவுபவரே குருமூர்த்தியாவர். இவர்தம் பெருமையை,

" மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரென்று உந்தீபற
தவத்தில் தலைவர் என்று உந்தீபற "

எனவரும் திருப்பாடலால் ஆசிரியர் விளக்குகிறூர். உயிருடன் ஒன்றியிருக்கும் திருவருளை உணரச்செய்வதே தீக்கையின் பயனுகும். அவ்வாறு உணரப்பெற்றபின் அத்திருவருளோடு ஒன்றியிருத்தலே உயிர் உய்திபெறுதற்குரியவழியாகும். இதனை,

" கிடந்த கிழவியைக் கிள்ளி யெழுப்பி
உடந்தை உடனே நின்று உந்தீபற
உன்னையே கண்டதென்று உந்தீபற "

எனவரும் பாடல் விளக்குகின்றது. இறைவனுடைய திருவருளைக் கைப்பற்றி பாசத்தால் விளையும் உடல் முதலியவற்றைக் கைவிட்டவரே ஞானியராவர். இவரை 'வித்தினைத் தேடி மூளையைக் கைவிட்டவர்' என இந்நூல் குறிக்கும். இறைவனைக் 'கள்ளர்' என்றும், 'எட்டுக்கொண்டார்' என்றும் இந்நூல் கூறியிருப்பது இறைவன் உயிர்க்குயிராகவும் உலகெலாமாகவும் நிற்கும் திறத்தைக் குறிக்கும்.

(தொடரும்)

# "களேபரம்"

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.,

முன்னுரை :

நாம் பேசும்போதும் எழுதும்போதும் பல சொற்களை வழங்குகின்றோம். ஆயினும், அவற்றில் ஒரு சில சொற்களுக்குக் கூட உண்மையான பொருள் இதுவென்று நமக்குத் தெரிவதில்லை. தொழில் செய்வோன் ஒருவன் தன் தொழிற்குப் பயன்படும் கருவிகளின் பலதிற அமைப்புக்களையும் நன்குணர்ந்து கொண்டாலன்றி அவற்றினைத் தக்கவாறு பயன்படுத்திக் கொண்டு நலம்பெறுதல் இயலாதவாறுபோல, மக்கள் தாங்கள் வழங்கும் சொற்களில் பலதிற அமைப்புக்களையும் நுட்பங்களையும் உணர்ந்து வழங்காமற்போவராயின், அதனால் அவர்களுக்கு விளையும் நலமும் ஓரளவு புரைபடுதல் திண்ணம். அதுபற்றியே,

" திறனறிந்து சொல்லுக சொல்லை, அறனும்
பொருளும் அதனினூஉங் கில் "

எனத் திருவள்ளுவர் கூறினர்போலும்! சொற்களின் அமைப்புக்கள் பலவற்றையும் ஆராய்ந்துணர்ந்த பேரறிஞர்கள் பலர், சொற்கள் தமக்கென ஒவ்வொரு காரணமும் வரலாறும் உடையன என்றும், இன்று நாம் வழங்கிவரும் சொற்களில் பண்டைய மக்களின் சமய சமூக அரசியல் நிலைகளை விளக்கும் குறிப்புக்கள் பலவும் அமைந்துகிடக்கின்றன என்றும், அவைகளையெல்லாம் ஆராய்ந்து அறிந்து மகிழ்ந்து தக்கவாறு வழங்கிவருவதே அறிவுடைய மக்களின் கடமையாகும் என்றும் பலபட விரித்து உரைப்பர். ‡

---

‡ " The teacher ought to note for remark the living memorials, in the words of today, of the social and political conditions of the people in the ages gone by.

சொல்லாட்சி :

"களேபரம்" என்னும் சொல்லினை நாம் பலகாற் கூறியும் கேட்டும் வந்திருக்கின்றோம். ஆயினும் அச்சொல்லைப்பற்றிய செய்தி எதுவும் நமக்குத் தெரியாது. எத்துணையோ பலப்பல சொற்களைத் திறனறியாமலும் பொருளுணராமலும் வழங்கி வருதல்போலவே, "களேபரம்" என்னும் சொல்லையும் நாம் ஏதோ ஒரு வகையாக வழங்கிவருகின்றோம். இச்சொல்,

"மக்களே மணந்த தாரம் அவ்வயிற் றவரை ஓம்பும்
சிக்குளே அழுந்தி ஈசன் திறம்படேன் தவமதோரேன்
கொப்புளே போலத் தோன்றி அதனுளே மறையக் கண்டும்
இக்களேபரத்தை ஓம்ப என்செய்வான் தோன்றினேனே." 1

"பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்
இருங்கடல் மூடி இறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமும் கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின்று எம்இறை நல்வீணை வாசிக்குமே." 2

— அப்பர்.

"ஏன்ற அந்தணன் தலையினை அறுத்து;
நிறைக்க மால் உதிரத்தினை ஏற்றுத்
தோன்று தோள்மிசைக் களேபரம் தன்னைச்
சுமந்த மா விரதத்த கங்காளன்;
சான்று காட்டுதற்கு அரியவன்; எளியவன்
தன்னைத் தன்னில் ஆம் மனத்தார்க்கு;
மான்று சென்று அணையாதவன் தன்னை
வலிவலம் தன்னில் வந்து கண்டேனே."—சுந்தரர்.

எனவரும் தேவாரப் பாடல்களில் பயின்று வந்துள்ளது. "களேபரம் என்னும் சொல் உடல், எலும்பு, பிணம் என்னும் பொருள்பட, இப்பாடல்களில் அமைந்துள்ளது. தாறுமாறு, சிக்கல், ஆரவாரம், குழப்பம் என்னும் இன்னோரன்ன பொருள்களில் பேச்சு வழக்கில், களேபரம் என்னும் சொல் இன்று வழங்கி வருகின்றது.

---

The inner life of people is stereotyped in their language and retained there for the instruction of future generations and the teacher will signally fail if he does not evoke from the fossil elements of words much of national history, customs and morals ........" — John Graham, English Word-Book.

சொற்களின் வரலாறு :

"சொற்களுக்குக் காரணமும் வரலாறும் உண்டு. அவைகளால் பண்டைய மக்களின் சமய - சமூக - அரசியல் நிலைகளை உணர்ந்து கொள்ளலாம்" எனக் கூறும் மொழி நூலாரின் ஆய்வு முறை கொண்டு, களேபரம் என்னும் சொல்லை நோக்கினால், இது "களபரர்" என்னும் சொல்லினின்று தோன்றியதாகலாம் எனக் கருத வாய்ப்புளது.

ஏனெனில், களபரர் அல்லது களப்பிரர் என்பார் நாடோடிகளாய், ஓரிடத்திலும் நிலையாகத் தங்காமல், மக்களைச் சூறையாடுவதே தம் தொழிலாகக் கொண்டிருந்து, குழப்பம் விளைவித்து வந்த கூட்டத்தினராவர். பல்லவர்களுக்கு முன்பே அவர்கள் தமிழகத்திற் புகுந்து சங்ககால வாழ்வைச் சீரழித்தனர். தமிழகத்திற் புகுந்து குழப்பம் விளைவித்தும், தமிழர்களின் பொருள் வளங்களைச் சூறையிட்டும், கலைகளை அழித்தும், வாணிகத்தைக் கெடுத்தும், அரசியலை அலைக்கழித்தும், சமய நெறியைத் தாக்கிக் கேடு சூழ்ந்தும், பலவகைக் கொடுமைகளை இழைத்தவர்கள் களபரர்களே என்று வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். கலியர் - களவர் - களபரர் - களப்பிரர் எனப் பல வகைகளில் இவர்கள் வழங்கப்படுவர்.

கருநாடர் :

களப்பிரர்கள் தமிழர் அல்லர்; தமிழ் நாட்டவரும் அல்லர்; ஓர் இடத்திலும் நிலையாகத் தங்காமல் அலைந்து திரிந்து கொள்ளையடிப்பதனையே தொழிலாகக் கொண்டிருந்த நாடோடிகள் (Nomads) எனத் தெரிகிறது. அவர்கள் புகுவதற்கு முன்னர்த் தமிழகம், பலதுறைகளிலும் சிறந்து மேலோங்கியிருந்தது. களப்பிரர்களின் வருகைக்குப் பின்னரே, கல்வி, வாணிபம், செல்வம், அரசியல், சமயம், சமுதாயம் முதலிய பல துறைகளிலும் தமிழகம் பெருவீழ்ச்சியடைந்தது.

"கானக்கடி சூழ் வடுகக் கருநாடர், காவல்
மானம்படை மன்னன், வலிந்து நிலம் கொள்வானும்,
யானைக் குதிரைக் கருவிப்படை வீரர் திண்தேர்
சேனைக் கடலும்கொடு தென்திசை நோக்கி வந்தான்!"

"வல்லாண்மையின், வன்தமிழ் நாடு வளம்படுத்து
நில்லா நிலை ஒன்றியே, விண்மையின் நீண்ட மேரு
வில்லான் அடிமைத் திறம் மேவிய நீற்றின் சார்பு
செல்லாது, அருகந்தர் திறத்தினில், சிந்தை தாழ்ந்தான்!"

என்று தமிழக வரலாற்றுப் பெருங்காவியம் ஆகிய பெரிய புராணத்தின்கண், "வடுகக்கருநாடர் மன்னன், வலிந்து நிலம் கொள்வானுய் வந்தான்; அருகந்தர் திறத்தினில் சிந்தை தாழ்ந் தான்" என்று, மூர்த்தி நாயனுர் வரலாற்றில், சேக்கிழார் பெருமான் குறிப்பிடும் வடுகக் கருநாடர் மன்னன், ஒரு களபரனே யாதல் வேண்டும்! வடுகன் என்றதனுல் மொழியும், கருநாடன் என்றதனுல் தேயமும், அருகந்தர்பால் தாழ்ந்தான் என்றதனுல் சமயமும் ஆகிய எல்லாவற்ருலும் அவன் வேறுபட்டு நின்றமை உணர்த்தப் பெற்றிருத்தல் காணலாம். அவனைத் தாழ்ந்தான் என்றும், வல்லாண்மையன் என்றும் சேக்கிழார், பெருமான் கூறியிருக்கும் நுட்பம், குறிக்கொண்டு நோக்கத் தக்கது.

களபரர் வீழ்ச்சி:

சங்ககாலப் பெருவேந்தனுக விளங்கியிருந்த பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி என்னும் பேரரசனுக்குப் பின்னர், தமிழ்நாட்டின் பல பகுதிகளில் புகுந்து கொலை கொள்ளை முதலிய பல அட்டூழியங்களைச் செய்து குழப்பம் விளைவித்த வடுகக் கருநாடர் ஆகிய களபரர்களை, கடுங்கோன் என்னும் பாண்டிய வேந்தனும்; சிம்மவிஷ்ணு, முதலாம் நரசிம்ம வர்மன் என்னும் பல்லவ மன்னர்களும்; விக்கிரமாதித்தன், விசயாதித்தன் என்னும் மேலைச் சளுக்கிய அரசர்களும் போரில் வென்று புறங்கண்டு வீழ்த்தி, தத்தம் நல்லாட்சியினை ஆங்காங்கே நிறுவினர்.

பாண்டியன் கடுங்கோன் என்பவன், சற்றேறக்குறைய கி. பி. 560 ல் களபரர்களை வென்று, தன் நாட்டைக் கைப்பற்றி மீண்டும் ஆளத்தொடங்கியதாக வேள்விக்குடிச் செப்பேடு விவரித்துக் கூறுகின்றது. பாண்டியன் கடுங்கோன் என்னும் தமிழ் வேந்தனுல் வென்று வீழ்த்தப்படுவதற்கு முன்னர், சில காலம் தமிழகத்தினைக் கைப்பற்றிக் களபரர்கள் உண்டாக்கிய குழப்ப நிலையே; பண்டைய தமிழ் மக்களால், "களேபரம்" என இகழ்ச்சிக் குறிப்பாக வழங்கப்பட்டிருத்தல் கூடும். கலவரம், கலாபனை போன்ற சொற்களும், 'களேபரம்' என்பதின் இனமாய சொற்களே யாதல் காணலாம். *

---

* "The Madura Tamil Academies collapsed perhaps on account of dynastic changes and of the disturbances created by the kalabras, who conquered the Pandya country in the

முடிவுரை :

களபரர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர், அவர்களை அடுத்துத் தமிழகத்தில் தலை எடுத்து நின்ற பல்லவ மன்னர்களின் காலத்தில் வாழ்ந்திருந்த திருநாவுக்கரசர், தம் காலத்துச் சமுதாயச் சூழலில் வழங்கி வந்த "களேபரம்" என்னும் வரலாற்றியக் குறிப்புச் சொல்லைத் தம் பாடல்களில் கையாள நேர்ந்தமை இயல்பேயாகும். திருநாவுக்கரசரின் பாடல்களை மிகவும் நுண்ணிதின் எண்ணிக் கற்று மகிழ்ந்திருந்தவர் சுந்தரர் ஆதலின், அவர் தாமும் அச்சொல்லை இயல்பாக எடுத்துக்கையாண்டனர்போலும்!

இஃது எங்ஙனமாயினும், களேபரம் என்னும் இச்சொல், பண்டைத் தமிழகத்தில் களபரர்கள் விளைவித்த பெரும் குழப்ப நிலையினை அறிவிக்கும் ஒருவகை வரலாற்றுச் சான்றாக இன்றும் நின்று நிலவி, நம் தேவாரப் பாடல்களில் விளங்கிக் கொண்டிருப்பது நம்மனோர்க்கு வியப்பும் விம்மிதமும் விளைவிக்கின்றது. இவ்வாற்றால் தேவாரத் திருமுறைகள், எவ்வகைகளிலெல்லாம் நம்மனோரின் பலதிற ஆராய்ச்சி நெறிமுறைகளுக்குப் பயன்படக் கூடியனவாகத் திகழ்கின்றது என்பதும் இனிது புலனாகின்றது!

---

sixth century. The real cause of their disruption seems to have been the irruption of the Kalabras into the Pandyanad. The common word "Kalebaram" meaning confusion, owed its origin to them". — Prof. M S. Purnalingam Pillai.

---

## பார்வையாளர் குறிப்பு

### திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், வைத்தீசுவரன்கோயில்.

23—10—77 அன்று இத்திருத்தலத்திற்கு வந்து கோயிலில் நடைபெற்ற பூஜைகளில் கலந்துகொண்டேன். கோயில் மிகச் சுத்தமான முறையிலும், வழிபாட்டிற்கு உகந்தமுறையிலும் உள்ளது போற்றத்தக்கது. யாத்திரீகரை நல்லமுறையில் அன்புடன் உபசரிப்பது மிகவும் நல்லது. நன்றி. வணக்கம்.

(ஒ-ம்) தெ. இராமச்சந்திரன்,
23—10—77. உள்துறை அமைச்சர், புதுவை.

தருமையாதீனம்

# வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்,

## வைத்தீசுவரன்கோயில்.

சீகாழி வட்டம் – தஞ்சை மாவட்டம்.

# திருவிளக்கு அறக்கட்டளை நிதி

காணிக்கை செலுத்தியவர்களின் பெயர் விபரமும்
மாயூரம் இந்தியன் வங்கியில் உள்ள முதலீடுகள் விபரமும்

( மலர் 36, இதழ் 11, பக்கம் 571 இன் தொடர்ச்சி )

| | | | |
|---|---|---|---|
| 122 | திரு. K. R. கேசவராவ், ஹைதராபாத் | ரூ. | 1000 |
| 123 | திரு. ஹரிஹரன், மதுரை | ... | 1000 |
| 124 | திரு. P. L. A. அண்ணாமலைச் செட்டியார், வைத்தீசுவரன்கோயில் | ... | 1001 |
| 125 | திரு. P. L. A. அலமேலு ஆச்சி, திருக்கருகாவூர் | ... | 1001 |
| 126 | திரு P. தருமராஜ், சென்னை | ... | 1000 |
| 127 | திரு. S. சுவாமிநாதன், சென்னை - 31. | ... | 1000 |
| 128 | உண்டியல் நிதி | ... | 1000 |
| 129 | ,, | ... | 1000 |
| 130 | ,, | ... | 1000 |
| 131 | ,, | ... | 1000 |
| 132 | ,, | ... | 1000 |
| 133 | திரு. V. S. பாலகிருஷ்ணன், கிழக்குராஜா அண்ணாமலைபுரம் | ... | 1000 |
| 134 | திரு. S. பாஸ்கரன், மாயூரம் | ... | 1000 |

---

## பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் மேற்பார்வையிலே சீகாழி கோயில் நல்ல முறையிலே பக்தியுணர்வு பொங்கிட நிர்வாகம் செய்யப்படுகிறது. நன்றி.

(S-d.) R. Ramanathan,

17—10—77.

Assistent Examiner Temple Audit.

# செய்திகள்

## தருமையாதீனம் ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயிலில்

## சதசண்டி வேள்வி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயிலில் புரட்டாசித்திங்கள் 27ம் நாள் முதல் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு காலை மாலை இருவேளைகளிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் லட்க்ஷார்ச்சனையும் நடைபெற்றன. துர்க்காம்பிகை சந்நிதியில் 27 ஆவது சதசண்டி வேள்வி நடைபெற்றது. 11—10—77 அன்று கணபதி ஹோமமும் 12—10—77 அன்று நவக்கிரக ஹோமம் அனுக்ஞை விக்னேசுவர பூஜை அங்குரார்ப்பணம் ரட்சாபந்தனம் முதலியவைகளும் நடைபெற்றன. 13—10—77 அன்று காலை கடஸ்தாபனமும் தொடர்ந்து சதசண்டி வேள்வியும் நடைபெற்றன. நாள்தோறும் காலை மாலை இருவேளைகளிலும் மகா பூர்ணாகுதி தீபாராதனைகள் நடைபெற்றன. 14—10—77 அன்று இரவு தீபபூஜையும் 17—10—77 அன்று வில்வ விருட்ச பூஜையும் 19—10—77 அன்று அஷ்டா தச ஆயுத மண்டல பூஜையும் சிறப்பாக நடைபெற்றன. 20—10—77 அன்று காலை சப்தசதி ஹோமம் சோபன த்ரவிய சமர்ப்பணம் மகா பூர்ணாகுதி தீபாராதனை முதலியன நடைபெற்றன. 21—10—77 அன்று துர்க்காம்பிகைக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சதசண்டி யக்ஞகலச அபிஷேகமும் நடைபெற்றது. நவராத்திரி நாட்களில் துர்க்காதேவி சந்நிதியில் சுவாசினி பூஜை குமாரி பூஜை வடுபூஜைகளும்-நான்குவேத பாராயணம், துர்க்கா சூக்த பாராயணம், திருமுறைப் பாராயணம், அபிராமி அந்தாதி பாராயணம் முதலியனவும் நடைபெற்றன.

ஒவ்வொருநாளும் மாலை மகாபூர்ணாகுதி வழிபாட்டிற்குப் பின்னர் ஆனந்ததாண்டவபுரம் பிரம்மஸ்ரீ. P. ராமதாச அய்யர் அவர்களால் "தேவீ பாகவத விரிவுரை" நிகழ்த்தப்பெற்றது. இந்நாட்களில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை மாலை இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபட்டு அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.

## ஆதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழா

தருமையாதீனத்தின் கல்வி நிலையங்களாகிய தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர்தொடக்கப்பள்ளி, வேதசிவாகமபாடசாலை தேவாரப் பாடசாலை ஆகியவற்றின் கலைமகள் விழா திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் 13—10—77 வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் தேவாரப்பாடசாலை மாணவர்கள் திருமுறைஓத தருமையாதீனப் புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., அவர்களுடைய சிறப்புரையுடன் தொடங்கப் பெற்றது.

16—10—77 அன்று பூம்புகார் தாசில்பண்ணை 'செந்தமிழ்ப் புரவலர்' திரு. இரா. இராஜசேகரன் பி. ஏ, பி எல்., அவர்களும் 17—10—77 அன்று ஆதீனக்கல்வி நிலையங்களின் செயலர் திரு. இரத்தின சபாபதிப்பிள்ளை அவர்களும், 20—10—77 அன்று தருமையாதீனப் புலவர், மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களும், 21—10—77 அன்று வித்துவான். திரு. மு. ஆறுமுக தேசிகர் அவர்களும் சிறப்புரையாற்றினர். இந் நாட்களில் வித்துவான், திரு. கா. ம. கண்ணப்பன், புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., புலவர். மு. சிவச்சந்திரன் எம். ஏ., வித்துவான். திருமதி. ப. நீலா எம். ஏ., தருமையாதீனப் புலவர். வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன், சிரோமணி திரு. பி. எஸ், கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள். திரு. ப. சிவராம கிருஷ்ணன் பி. ஏ., பி டி. திரு. தி விவேகானந்தம் பி. ஏ., பி.டி., சிவாகம வித்துவான், சிவஸ்ரீ. எஸ். சுவாமிநாத சிவாசாரியார் ஆகியோர் பல தலைப்புக்களில் விரிவுரையாற்றினர்.

நாள்தோறும் ஆதீனக் கல்லூரி மாணவர்கள் இருவரும் மாணவியர்கள் இருவரும் அம்மை அருளை விளக்கும் தலைப்புக் களில் சொற்பொழிவாற்றித் தங்களது கன்னிப்பேச்சை அரங் கேற்றினர். இந்நாட்களில் ஆதீனக் கல்வி நிலைய மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. 16—10—77 அன்று மாலை 6 மணியளவில் 'திருவிளையாடல்' படம் திரையிடப் பட்டது.

## தருமபுரம் ஞானாம்பிகை மகளிர் கலைக் கல்லூரி மாணவியர் கலை நிகழ்ச்சிகள்

கலைமகள் விழாவில் மாயூரம், தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி மாணவிகளும் பங்குகொண்டு தங்கள் கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது. முதல்

நாள் (14—10—77) "வண்ணக்கலவை" நிகழ்ச்சியாகப்பல்வகை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்து மாயூரம் ஜட்ஜ் திரு. S. இராமகிருஷ்ணன் அவர்கள் பாராட்டுரை வழங்கினார்கள்.

15—10—77 சனிக்கிழமையன்று சென்னை திரு. N நாகராசன் அவர்கள் குமாரி, செல்வி. சியாமளா அவர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சி மாலை 7 மணியளவில் தொடங்கி நடைபெற்றது. மாயூரம் கோட்டாட்சியர் திரு. சோணைமுத்துக்கோன் அவர்களும் பூம்புகார் கலைக்கல்லூரி முதல்வர் திரு. A. R. இலட்சுமணன் M.A. அவர்களும் பரதநாட்டியம்பற்றிவிளக்கி, சியாமளாவின் நாட்டிய நிகழ்ச்சியைப் பாராட்டிப் பேசினார்கள். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பரதக்கலையை விளக்கி அருளாசி வழங்கிச் செல்வி. சியாமளாவிற்கும், வண்ணக்கலவை நிகழ்ச்சியில் பங்குகொண்டவர்க்கும் ஊக்கப்பரிசுகள்வழங்கியருளினார்கள்.

## தருமையாதீனத் திருக்கோயில்களில் நவராத்திரி விழா

திருக்கயிலாயபரம்பரைத்தருமையாதீனத்திற்குச்சொந்தமான திருக்கோயில்களில் 13—10—77 முதல் 21—10—77 முடிய உள்ள நாட்களில் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது. புரட்டாசி மாதத்து வளர்பிறைப் பிரதமை முதல் 9 நாட்கள் கொண்டாடப்பெறுவது நவராத்திரி விழாவாகும். இந்த 9 நாட்களில் சிவசக்தியாகிய பராசக்தியைப் பலவிதசக்திவடிவங்களில் வழிபடுகிறோம். இக்காலங்களில் உண்டாகும் காலரா முதலிய நோய்களிலிருந்து உய்தி பெறுவதற்காகவே இவ்விழா கொண்டாடப்பெறுகிறது. முதல்மூன்று நாட்கள் வெற்றித்தெய்வமாகிய துர்க்காம்பிகையையும் அடுத்த மூன்று நாட்கள் செல்வத்திற்கு அதிதேவதையாகிய இலக்குமியையும், கடைசி மூன்று நாட்கள் கலைகளுக்கு அதிதேவதையாகிய கலைமகளையும் வழிபடுதல் மரபு. இவ்வொன்பது நாட்களிலும் வழிபட இயலாதவர்கள் கடைசி மூன்று நாட்களிலாவது அம்மையை வழிபட்டு அருள் பெறுவது இன்றியமையாததாகும்.

இந்நாட்களில் வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தையல்நாயகியம்மைக்கும், சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில்] ஸ்ரீ திருநிலைநாயகி அம்மைக்கும், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அபிராமி அம்மைக்கும், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ பிருகந்நாயகி அம்மைக்கும், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அறம்வளர்த்த நாயகிக்கும் விசேஷ அபிஷேக ஆராதனை

களும் நவசக்தி அர்ச்சனைரூபமான இலட்சார்ச்சனையும் நடைபெற்றன.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தருமசம்வர்த்தினி அம்மைக்கும், திருக்குவளை ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீவண்டமரும்பூங்குழல் அம்மைக்கும், பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ பவானி அம்மைக்கும், குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ மிருதுமுகிழாம்பிகை அம்மைக்கும் வள்ளலார் கோயில் ஸ்ரீ வதான்யேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ ஞானம்பிகை அம்மைக்கும், ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருவெண்ணீற்றுமையம்மைக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனையும் நடைபெற்றன. இந்நாட்களில் அன்பர்கள் பலர் வந்து வழிபட்டு அம்மை அருள்பெற்றனர். நவராத்திரி விழாவை முன்னிட்டு அம்மை அருள்பற்றிய சமய விரிவுரைகள் அறிஞர்கள் பலரால் நிகழ்த்தப்பெற்றன. அன்பர்கள் பலர் கேட்டுப் பயன் பெற்றனர்.

## ஆயில்யத் திருநாள் வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் வழிபாடு 4—11—77 வெள்ளிக்கிழமையன்று காலை அன்பிலாலந்துறை ஸ்ரீ சௌந்தரநாயகி உடனாகிய ஸ்ரீ சத்தியவாகீசர் திருக்கோயிலிலும், மாலையில் திருமாந்துறை ஸ்ரீ அழகம்மை உடனாகிய ஸ்ரீ ஆம்பரவனநாதர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. திருஅன்பிலாலந்துறை திருமாந்துறை ஆகிய தலங்களின் தேவாரத் திருப்பதிகங்கள் அச்சிட்டு வழங்கப்பட்டன. ஓதுவாமூர்த்திகளால் திருப்பதிகப் பாராயணம் செய்யப்பெற்றது. தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்களால் சமய விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. உள்ளூர் அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு வழிபட்டுப் பயன்பெற்றனர்.

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஆறுவது ஆண்டுக் குருபூஜை விழா, அவர்களது குருமூர்த்த ஆலயத்தில் 4—11—77 வெள்ளிக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. அன்று

இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் காலை மாலை இருவேளை களிலும் குருமூர்த்த ஆலயத்திற்கு எழுந்தருளி விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் வழிபாடுநிகழ்த்தி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள். குருபூஜை விழாவை முன்னிட்டு திருமுறைப் பாராயணம் சொற்பொழிவு பட்டிமண்டபம் முதலி யன நடைபெற்றன. காலை வழிபாட்டின்போது வித்துவான். ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், மகாவித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர், வித்துவான். திரு. மு. ஆறுமுக தேசிகர் ஆகியோர் உமாபதிதேவ நாயனார் அருளிய சித்தாந்த நூல்களைப்பற்றி விரிவுரையாற்றினார்கள். மாலை 6 மணி அளவில் வேலூர் திரு. க. சொக்கலிங்கம், சீகாழி திரு. S. திருஞான சம்பந்தம் ஆகியோர் குழுவினரால் திருமுறை இன்னிசையரங்கு நிகழ்த்தப்பெற்றது.

இரவு வழிபாட்டிற்குப்பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் முன்னிலையில் பட்டிமண்டபம் நிகழ்ந்தது. கயிலைக் குருமணியின் புகழ் விஞ்சிநிற்பது கற்கோயில்களிலா? சொற் கோயில்களிலா? என்ற தலைப்பில் பட்டிமண்டபம் தொடங்கியது. கயிலைக் குருமணியின் புகழ் விஞ்சிநிற்பது கற்கோயில்களிலேயே என்ற தலைப்பில் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., கல்லூரி மாணவி செல்வி. இரா. மைதிலி ஆகியோர் வாதிட்டனர். சொற்கோயில்களிலேயே என்ற தலைப்பில் திரு. கு சுந்தரமூர்த்தி எம். ஏ., திருமதி. ப. நீலா எம். ஏ, கல்லூரி மாணவி செல்வி. தி. விஜயலட்சுமி ஆகியோர் வாதிட்டனர், பட்டிமண்டபத்திற்கு நடுவராக இருந்த டாக்டர். திரு. சொ. சிங்காரவேலனர் எம். ஏ., பி. எச்டி., அவர்கள் கயிலைக் குருமணியின் புகழ் கற்கோயில்கள், சொற்கோயில்கள் ஆகிய இரண்டிலுமே விஞ்சிநிற்கிறது என்று தீர்ப்பளித்தார்கள். இறைவாழ்த்துடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தேவார வகுப்பில் பயிலும் மாணவ மாணவியருக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் குருமூர்த்த ஆலயசந்நிதியில் புத்தாடைகள் வழங்கியருளினார்கள். விழாமலராக உமாபதிதேவநாயனார் அருளிய 'சிவப்பிரகாசம்' என்ற நூல் கா. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் உரை நடை யுடன் வெளியிடப்பெற்று அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது.

# சென்னை, தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையம்

**நாயன்மார்கள் குருபூஜைகள் :**

சென்னை - தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் திரு நாளைப்போவார் நாயனார், அருணந்தி சிவாச்சாரியார். திருமூலநாயனார், நெடுமாற நாயனார், இடங்கழி நாயனார் குருபூஜைகள் முறையே 2—10—77, 10—10—77, 26—10—77, 27—10—77, 29—10—77 ஆகிய நாட்களில் நடைபெற்றன. திரு. V. N. ஆறுமுகம் அவர்கள் பெரியபுராணம் வாசித்து விளக்கவுரை செய்தார்கள். திருமுறை பயிலும் மாணவ மாணவிகளும், அன்பர்களும் கேட்டுப்பயனடைந்தனர்.

**திருக்கோவையார் விளக்கவுரை :-**

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் 3—10—77, 6—10—77 நாட்களில் திருக்கோவையார் விளக்கவுரை திரு. N. R. முருகவேள் அவர்களால் தொடர்ந்து நடத்தப்பட்டது. அன்பர்கள் பலர் வந்து கேட்டுப் பயன் பெற்றனர்.

**நவராத்திரி விழா :**

சென்னை, தருமை யாதீன சமயப்பிரசார நிலையத்தில் இவ்வாண்டு நவராத்திரி விழா 13—10—77 முதல் 21—10—77 முடிய உள்ள நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. விழாவைச் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி கனம் திரு. V. சேதுராமன் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். நவராத்திரி விழா தமிழ் நாட்டிலும் கேரளம், வங்காளம் முதலிய இடங்களிலும் கொண்டாடப்பெறுகிறது. துர்க்கா தேவி குறித்து வழிபாடு செய்யப்படுகிறது "சப்தசதி" என்ற நூலில் தேவியினுடைய பெருமை, தோத்தரிக்கும் முறை இவை சொல்லப்பெற்றுள்ளன. ஒன்பது நாட்களிலும் விரதம் இருந்து முறையாக வழிபாடுசெய்தால் அம்மை அருளைப் பெறலாம் என்று தம் உரையில் குறிப்பிட்டார்கள்.

அருட்கவி ஸ்ரீ தேவி கருமாரி தாஸர் அவர்கள் "தேவி மகாத்மியம்" என்ற தலைப்பில் ஸ்ரீ தேவியின் பெருமையை எல்லோரும் பாராட்டும்படி பல மேற்கோள்கள் காட்டி விளக்கிப் பேருரை ஆற்றினார்கள். 21—10—77 ஆம் நாள் அன்று சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி கனம் திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் விழா நிகழ்ந்தது. தலைவர்

அவர்கள் அன்பர்கள் வழங்கிய வெண்பட்டாடையை ஸ்ரீ கருமாரி தாஸருக்குப் போர்த்திச் சிறப்பித்தார். பின்னர் தமது தலைமை யுரையில் திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் ஒன்பது நாட்களிலும் விழா சிறப்பாக நடப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. ஸ்ரீ கருமாரிதாஸரைக் கொண்டு பேருரை ஆற்றச் செய்வது நல்ல பயனை அளிக்கும். ஸ்ரீ ராமதாஸரும் ஸ்ரீ கருமாரிதாஸரும் சக்தியின் துணைகொண்டு சென்னைவாழ் மக்களுக்கு அம்பாளின் அருளைக்கொண்டு மக்களின் நோயைப் போக்கிப் பக்தியை வளர்க்கிறார்கள். மாற்றுச் சமயத்திற்குச் செல்லும் மக்களைத் தடுத்து நிறுத்துகிறார்கள். இதனால் ஸ்ரீ கருமாரிதாஸர் பாராட்டுக்குரியவராகிறார்கள் என்று கூறினார்கள்.

கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா :

சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 30—10—77 அன்று மாலை கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா நடைபெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு நிலைய ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசம் வேளூர்ப் பதிகங்களைப் பாடினார்.

விழாவிற்குத் தலைமை வகித்த தேவி உபாசகர் திரு. R. V. ரமணி அய்யர் அவர்கள் தமது விரிவுரையில் " அன்னை அபிராமியின் அருள் கடாக்ஷம் இங்குப் பூர்ணமாய் நிறைந்திருக்கிறது. இங்கே வந்துள்ள அன்பர்களும் அம்மையார்களும் நல்ல புண்ணியம் செய்திருக்கின்றார்கள். ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமியின் பேரருள் ஒளிப்பிரசாதம் அன்பர்கள் ஒவ்வொரு மாதமும் பெறுகிறார்கள். கல்வியின் பயன் அறிவு, அறிவின் பயன் தனிப்பெரும் கருணையின் வடிவாகிய அன்னை அபிராமியின் திருமேனியைச் சிந்திப்பதும், திருவடியைப் போற்றுவதும், தோத்திரங்களைப் பாராயணம் செய்வதும் ஆகும். இவை மனிதனின் தலையாய கடமையாகும். அறவழி நின்று ஈட்டிய பொருளைக்கொண்டு அடியார்களுக்கு அன்னம்பாலிப்புசெய்வது திருவடிப்பேறு அடைவதற்குச் சிறந்த மார்க்கமாகும். தர்மமிகு சென்னையில் தருமையாதீனச் சார்பில் நடைபெற்றுவரும் இத்தெய்வீக நிகழ்ச்சிகளால் இந்நிலையம் தெய்வீக அருள்சுரக்கும் ஒரு பேரருள் நிலையமாக விளங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரசார நிலையம் வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் நன்றியுரை கூறிய பின்னர் அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பெற்றது.

மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு :

சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலையச் சார்பில், மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு 30—10—77 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 9-00 மணி முதல் பகல் 1-00 மணி வரை சென்னை சேப்பாக்கில் உள்ள ஸ்ரீ சொர்ண விநாயகர், தாந்தோன்றி அம்மன் கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ சித்தி புத்தி சொர்ண விநாயகர், ஸ்ரீ சுந்தரேஸ்வரர், ஸ்ரீ மீனுக்ஷி அம்மன், ஸ்ரீ தாந்தோன்றி அம்மன் ஆகிய மூர்த்தி களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. கோயிலிலுள்ள இதர மூர்த்திகளுக்கு அர்ச்சனைசெய்யப்பெற்றது. வழிபாட்டின்போது நிலைய ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசமும் குமாரி. R. கௌரி சகோதரிகளும் திருமுறைப் பாராயணம் செய்தனர். மேற்படி பேட்டையில் உள்ள ஒரு பஜனை கோஷ்டி யைச்சேர்ந்தவர்களும் பஜனைசெய்து எல்லோரையும் வழிபாட்டில் ஈடுபடுத்தினர்கள்.

வழிபாட்டிற்குப் பிறகு சமயப் பிரசாரக் கூட்டம் நடை பெற்றது. திரு. R. சிவஞானம் செட்டியார் அவர்கள் வரவேற் புரை கூறினர்கள். அதன் பிறகு பேசிய திரு. சிம்மக்குரல் சீதாபதி அவர்கள் தருமை ஆதீனத்தால் நடைபெறும் இம்மாதிரி கூட்டு வழிபாடு நம்மைப்போன்ற பல ஆன்மாக்கள் ஒன்று சேர்ந்து வழிபாடு நடத்தி அதன் பயனை அடைவதற்கு உறு துணையாக இருக்கிறது. அதற்கு அவர்களைப் போற்றி வணங்க வேண்டும் என்றும், மாதந்தோறும் வழிபாட்டில் தவருமல் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். அடுத்துப் பேசிய திரு. வ. க. கிருஷ்ணன் மக்களிடையே பக்தியைப் பரப்புவதற்குத் தருமை ஆதீனம் இம்மாதிரி வழிபாட்டை நடத்தி வருகிறது. இதில் எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும். நாட்டில் ஒழுக்கம் நிலைத்திட மக்களுக்குத் தெய்வ பக்தியுடன் கூடிய தேச பக்தி ஏற்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். திரு த. கேசவன் பேசும்போது வழிபாடு களில் விக்னேஸ்வரர் வழிபாடு மிகவும் சிறந்தது என்றும், இம் மாதிரி வழிபாட்டில் எல்லோரும் கலந்துகொண்டால் எல்லோரும் நிச்சயம் பலனடையலாம் என்றும் சொன்னர். திரு. N. இராசு பக்திதான் நம்மை நல்ல வழியில் செலுத்தும் என்றும், சிறுவர் களைப் பக்தித்துறையில் ஈடுபடுத்த வேண்டும், அதற்கு வழிகாட் டியாக நாம் மாதம் ஒருமுறையாவது இம்மாதிரி வழிபாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். திரு. மு. கு. புண்ணியகோடி பேசுகையில் தருமை ஆதீன வழி பாடுகள் மாதந்தோறும் சீரும் சிறப்புமாக நடந்து வருகிறது.

பக்தர்களைக் கூட்டி அவர்கள் உள்ளத்தில் பக்தியை ஊட்டுகிறது. வழிபாட்டிற்குப் பக்திதான் மிகவும் அவசியம். பக்தியோடு வழி பட்டால் இறைவனின் அன்புகிட்டும். இறைவனின் அன்பைப் பெற்றால் இன்பத்தோடு வாழ முடியும் என்று சொன்னார். குமாரி R. கௌரி தன் உரையில் பஞ்சாட்சரத்தின் மகிமையைத் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியவர்களின் வரலாற்றி லிருந்து மேற்கோள்கள் எடுத்துக்காட்டி விளக்கிக் கூறினார்கள். "ஓம் நமசிவாய" என்று சொன்னால் எல்லா நன்மைகளும் ஏற்படும் என்றும், ஒரு குருவின் மூலமாகப் பஞ்சாட்சரம் கேட்டு ஓதி வந்தால் இறைவன் அருள் கிடைக்கும் என்றும் கூறினார்கள். பிரசார நிலையம் வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் எல்லோருக்கும் நன்றி கூறியபின் கூட்டம் நிறைவு பெற்றது.

---


# "ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்"

(மாதப் பத்திரிகை)

- கடந்த 57 ஆண்டுகளாக-தமிழகத்தின் சமய வளர்ச்சிக்காக-ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் சார்பாகத் தமிழில்வெளிவருகிறது.
- மகான்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகள், அன்றாடவாழ்க்கையில் மதத்தைக்கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள், சாஸ்திரங்களின் உட்பொருள் விளக்கங்கள், ஆத்ம தத்துவம் குறித்த ஆராய்ச்சி, உபநிஷத உண்மைகள், இதிகாசங்கள், பக்தி, வேதாந்தம், சைவ சமயக் கருத்துக்களைக்கொண்டது.
- ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக விளங்கி மத உண்மைகளைப் புகட்டு கிறது. உங்கள் உள்ளம் உயர, நீங்கள் ஹிந்து மதத்தை உள்ளபடியே புரிந்துகொள்ள அவசியம் படிக்கவேண்டிய பத்திரிகை இது.

சந்தா விபரம்

வருட சந்தா : ரூ. 7-00 ... ஆயுள் சந்தா : ரூ. 100-00

ஆயுள் சந்தாவைப் பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 10 ஆகவோ, மொத்தமாகவோ பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

இராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்,
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர், சென்னை-600004.

# எதிர்காலம்

**ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்**
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**( பிங்கள ஆண்டு கார்த்திகை மீ 1௳ முதல் 30௳ முடிய )**
**( 16—11—1977 முதல் 15—12—1977 முடிய )**

ஸ்ரீ பிங்கள ஆண்டு கார்த்திகை மீ 1௳ புதன்கிழமை உத்திராட நக்ஷத்திரம் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 14 நாழிகை 9 விநாடிக்கு மகர லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரியபகவான் துலா ராசியிலிருந்து விருச்சிகராசி சங்கிரமணமாக கார்த்திகை மாதப்பிரவேசம் செய்கின்றார். அதன் பலன் லோகத்தில் எங்கும் சுபிட்சமும் ரட்சணையும் ஏற்படும். தேசங்களில் எங்கும் பொருளாதாரத்திற்கான செயல் திட்டங்கள் தீவிரமாகும். இந்தியாவில் வெளிநாட்டு வாணிபம் வெளிநட்புறவு நடைமுறையில் கணிசமாக இருந்துகொண்டிருக்கும். ஸ்ரீ சிவசக்தி அனுக்கிரகத்தில் தேசங்களில் எங்கும் ஆன்றோர்கள், தேசத்தலைவர்களினால் பிரஜா நல சேவா தர்மங்கள் நிவாரணங்கள் வெகுவாக நடந்து பிரஜைகள் நலம் பெற்று உய்வார்கள். உலகில் ஏற்பட்டுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் வரப்பிரசாதமாக திருவீற்றிருக்கின்ற சிவ ஞான பரமாச்சாரியர்களின் ஞான வழியில் லோகமெங்கும் திருக்கோயில்களில் பூசைகள் நடைபெற்று வரும். லோக மக்கள் வித்தியா ஞானமும் சிவஞான அறிவும் வளர்ச்சியுற்று நேர்மையாகத் தொழில் வளம் பெருக்கி மேலான வாழ்க்கை நடத்துவார்கள்.

குறிப்பு:— யுகம்.

உத்தமதேதிகளினுடைய ஒருதினத்தின் சுவாசமாகிய 21600 ஐ சதுர வகையான முழுச்சதுரக்கூறுகிய 80 ஆல் பெருக்கவருவது கிரேதாயுகம் 17,28,000 ஆண்டு

¾ சதுரக்கூறுகிய 60 ஆல் பெருக்க வருவது திரேதாயுகம் 12,96,000 ஆண்டு

½ சதுரக் கூறுகிய 40 ஆல் பெருக்க வருவது துவாபரயுகம் 8,64,000 ஆண்டு

¼ சதுரக்கூறுகிய 20 ஆல் பெருக்கவருவது கலியுகம் 4,32,000 ஆண்டு

இந்த நான்கு யுகங்களின் வித்தியாசத்திற்குத் தக்கபடி மனிதர்களின் தருமமும், ஆயுளும் குறைவாகிறது என்பது மனுதர்ம சாஸ்திரங்களிலிருந்து அறியக்கிடக்கின்றது. இந்த நான்கு யுகங்களும் சேர்ந்தது ஒரு மகாயுகம் எனப்படும். இந்த மகாயுகம் 1000 சென்றால் பிரம்மாவிற்கு ஒரு பகற்பொழுதாகும். இது ஒரு 'கற்பம்' என்று சொல்லப்படும். அக்கற்பமாவது சிருஷ்டியாதி பிரளயாந்த காலமாகும்.

இதுவரையில் சிருஷ்டியாதியாக சென்ற வருஷங்கள் 195,58,85,078 ஆகும். இது ஜோதிஷ சாஸ்திரங்களில் கூறியவாறு கணக்காகிறது. ஆகவே அற்பமாகிய ஜீவிய காலத்தையுடைய நாம் உயர்கிரியைகள் புரிந்து பரமனை நினைந்து சிவசமய நெறியுடன் வாழ்ந்து உயர்வடைவோமாக.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼
( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷ ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவரவுகள் கணிசமாக வந்துகொண்டிருக்கும். எல்லாவிஷயங்களிலும் தாமத நிலைமை நிவர்த்தியாகித் துரித மேற்படும். மாதப் பின்பகுதியில் எழுத்து ஆராய்ச்சி பத்திர லிகிதங்களில் எதிர்பார்த்த பலன் திருப்தியாக அடைதலாகும். நாற்கால் ஜீவன்கள் நூதன வாகன சேர்க்கையில் திருப்தியளிக்கும். புத்திரர் நலம் நன்றாக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் சுமுக உறவு நிலவும். செய்தொழில்கள் சுறுசுறுப்புடன் நடந்துவரும். புதன், வியாழன் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½
( இ. ஊ. ஏ. – ஒ. வ. வி. வூ. – வே. வோ. )

ரிஷப ராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடந்துவரும். குடும்பத்தில் சமயோசித வருமானங்கள் வந்துகொண்டிருக்கும், சகோதரர் விசுவாசம் அவர்களின் ஒத்துழைப்பு திருப்தியளிக்கும். வித்துவத்துவத்தில் சிறப்பு தரும். மாதப் பின்பகுதி சாதாரண பலனாக நடந்துவரும். வீடுவாகனங்களில்செலவினங்கள் ஏற்படும். புத்திரருக்கு நரம்புத் தளர்ச்சிநோய் கண்டு நீங்கும். மனைவிக்கு சிரோரோகம்வந்துகுணமாகும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய நலம்தரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் மேலிடத்தில் சலுகைகள் இருந்துவரும். வெள்ளி சனி சுபமாகும்.

3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾
( கா. கி. – கு. க. ங. ச்சா. – ஹே. ஹோ. ஹ. )

மிதுன ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபி விருத்தியில் வருமானங்கள் போஜன சௌகரியங்கள் திருப்தி

யாக இருந்துவரும். இளைய சகோதரருக்கு சுப மங்களம் ஏற்படும். விவசாயத்தில் நற் பலன் ஏற்படும். வித்தியாவியாபாராதிகளில் நாளுக்கு நாள் முன்னேற்றம் ஏற்படும். மனதில் உள்ள குறை தீரும். சத்துரு மித்திரமாக வருவார்கள். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செய்தொழிலில் இலகுவில் காரிய சாதனையை ஏற்படுத்தும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்
( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடக ராசி 9 பாதங்களும், மிச்சிர பலனாக நடந்து வரும். குடும்பாபிவிருத்தியில் பண வரவுகளில் குறைவின்றி வரவுகள் வந்துகொண்டிருக்கும். குடும்பத்தில் அடிக்கடி அவசியச் செலவுகளும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். சகோதரர் புத்திரர் சுகம் சாதாரணமாக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் விருப்பு வெறுப்பு கலந்துகாணும். ஞாயிற்றுக்கிழமையில் சூரியார்ச்சனை செய்யக் குடலில் ஏற்படுகின்ற உஷ்ண நலிவு தீரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் காரியங்கள் மனோதைரியத்தில் செயல்பட்டு வரும். சந்திராஷ்டமம் நீங்கிய புதன் வியாழன் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼
(ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே. )

சிம்ம ராசி 9 பாதங்களும் சுமாரான பலனாக நடந்துவரும். குடும்பாபிவிருத்தியில் பண வரவுகள் கணிசமாக வந்து கொண்டிருக்கும். சகோதரர் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் பிரசித்தம் ஏற்படும். விவசாயத்தில் பூர்வசொத்தில் ஓரளவு பலன்தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் உயர்வும் மேலிடத்தில் கௌரவமும் தரும். வெள்ளி, சனி சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½
( டோ. பா. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ. )

கன்னியா ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பண ஆதாயங்கள் திருப்தியாக வந்துகொண்டிருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். வாக்கு கௌரவம் மேலிடும். சகோதர சகோதரிகள் சௌக்கிய மேன்மையில் இருந்து வருவர். வித்தியா வியாபாராதி கலைத் துறையில்

அரசாங்க நிபந்தனைப்படி ஓர் அளவு பலன் ஏற்படும். தாம் பத்திய வாழ்க்கையில் சௌகரியங்களைத்தரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் கடமைகள் நடந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

## 7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலா ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். தனுதி சௌகரியங்கள் நன்றாக இருந்துவரும். குடும்பத்தினர் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் அரசாங்க அனுகூல வாய்ப்புக்களை ஏற்படுத்தி நன்மையைத் தரும். விவசாயத்தில் ஓர் அளவு பலன்தரும். இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி பலன் ஏற்பட்டு வரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அலுவல்கள் செம்மையாக நடந்துவரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

## 8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

( தே. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு. )

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத் தரும். குடும்பத்தில் பண வசதிகளில் குறைவின்றி நிறைவாகவே இருந்துவரும். உடலில் உஷ்ணதிக்கம் பொருந்தி காணும். ஞாயிற்றுக்கிழமையில் சூரியார்ச்சனை செய்ய நலம்தரும். சகோதரர் பகட்டப்படுதல் மனக் குறையாதல் அவற்றைச் சரி செய்தல் ஆகியவை நிகழும். வாகனத்தில் ஓர் பழுது வந்து சீர்படும்: தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். செய்தொழிலில் அலுவல்கள் தேக்கமாக இருந்துவரும். புதன் வியாழன் சுபமாகும்.

## 9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

( யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே. )

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் நிரந்தரமாக வரும் பணவரவுகள் வந்து கொண்டிருக்கும். எதிர் பாராத செலவினங்கள் ஒரு புறம் ஏற்படுவதாகும். சகோதரம் பந்து அம்மான்களின் சௌக்கியம் கருதி அலைச்சல் ஏற்படும். தொழில் முதலீடு செய்தல், அரசாங்க நிபந்தனைகளை நிறைவேற்றல் ஆகியவற்றில் பிரயாசையாக இருந்துவரும். புத்திரருக்கும் பயணத்தில் ஓர் விபத்து சம்பவிக்கும். சந்திராஷ்டமம் நீங்கிய வெள்ளி சனி சுபமாகும்.

## 10. மகரம் – உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

( போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – கா. கி. )

மகர ராசி 9 பாதங்களும் சுமாரான பலனாக நடந்துவரும். குடும்பாபிவிருத்தியில் சகல பிரச்சினைகளையும் பணத் தேவைகளையும் செய்முயற்சியின்மீது சரிசெய்துகொள்ளல் ஆகும். சகோதரர் ஒற்றுமையின்மையுக் பாகப்பிரிவினை பிரச்சினைகளும் ஏற்படச் செய்யும். பந்து அம்மான்கள் அன்யோன்யமாக இருந்து வருவார்கள் மாதப்பின்பகுதியில் புத்திரர் அல்லது புத்திரிக்கு மகிழ்ச்சிக்குரிய நன்மையைக் கொடுக்கும். பெண் மகவு ஒன்று ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் மேலிடத்திய நன்மையை ஏற்படுத்தும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

## 11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾

( கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனாக நடந்துவரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல தன லாபங்களை ஏற்படுத்தும். சகோதரர் சகோதரிகளின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். இயந்திர வாகனத்தில் ஓர் பழுதுவந்து புதுமையாகும். பிதாவின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். குருமார்களின் ஆசி, பிரபலஸ்தர்களால் கௌரவிக்கப்படுதல் ஆகிய நற்பலன்களைத் தரும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். கோர்ட் விவகாரம் ஜெயமாகும். செய்தொழில்கள் நன்மதிப்புடன் விளங்கும். புதன் வியாழன் சுபமாகும்.

## 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

( தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச.சி. )

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடந்துவரும். குடும்பத்தில் சொந்த வருமானம் சீராக இருந்துவரும். பொது பண வரவு செலவுகள் இருந்துகொண்டிருக்கும். மூத்த இளைய சகோதரர்களின் சௌகரியம் பொருளாதாரம் நன்றாக இருந்துவரும். எழுத்துமூலிய லேவாதேவிகளில் கணக்குகளில் அரசாங்க நிபந்தனைகளால் சீரான பலனாக இருந்துவரும். புத்திரரின் போக்கு நிலைமையில் கவலையாக இருக்கும். தாம்பத்தியவாழ்வில் சஞ்சலம் இருந்துவரும். ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு அருச்சனை செய்ய நலம் தரும். செய்தொழில்களில் கடமைகள் நடந்துகொண்டிருக்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

சைவ சித்தாந்தப் பேரறிஞர் – பெரியார்

## திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A. B. T. அவர்களுக்கு*

# உதவித் தொகை வழங்கல்

சைவ சித்தாந்த உலகில் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்களை அறியாதார் யாருமிலர். அவர்கள் நடத்திய – நடத்தி வருகின்ற சித்தாந்த வகுப்புகள் மிகப்பல. தமிழ்நாடெங்கனும் சென்று முறையாகச் சித்தாந்த சாத்திரங்களை ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குத் தெளிவுறக் கற்பித்திருக்கிறார்கள். அவர்கள் பேசிய – பேசிவருகின்ற சித்தாந்தச் சொற்பொழிவுகள் எண்ணற்றவையாகும். அவர்கள் எழுதியுள்ள சித்தாந்த நூற்களின் பட்டியல் கீழே தரப்பெற்றுள்ளது. அந்நூல்கள் சித்தாந்தப் பேருண்மைகளை இனிது விளக்குவனவாகும். சென்ற ஐம்பதாண்டுகளாகச் சைவ சித்தாந்தமே தம் உயிர் மூச்செனக் கொண்டு அவர்கள் செயலாற்றிவருகிறார்கள்.

இப்பொழுது திரு. முதலியார் அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தத் துறைத் தலைவராக இருந்து பணி புரிகிறார்கள். அவர்கள் பெறும் ஊதியம் இன்றைய நிலையில் குடும்பச்செலவிற்குத்தான் போதுமானதாக இருக்கிறது. மிகப் பெரிய குடும்பத்தைச் சார்ந்த அவர்கள் குடும்ப மங்கல நிகழ்ச்சிகள் பற்றி இதுகாறும் சிந்திக்காது இருப்பதை அறிந்த நாங்கள் அவர்கள் குடும்ப நல உதவிக்காக ஒரு தொகை சேர்த்து வழங்க வேண்டுமென எண்ணினோம். திரு. முதலியார் அவர்கள் இதற்கு உடன்படவில்லை. ஆனால் நாங்கள் வற்புறுத்தி இவ்வறிக்கையை விடுப்பதெனத் தீர்மானித்தோம்.

சைவ சித்தாந்தத்திற்கும் சைவ சமயத்திற்கும் தம்மை முழுதும் அர்ப்பணித்துக்கொண்ட பெரியோர்களை எவ்விதக் குடும்பக் கவலையுமின்றி வாழச் செய்விப்பது நம் கடமையாகும்.

---

* திரு. க, வச்சிரவேல் முதலியார் அவர்கள் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகளால் "தருமையாதீனப்புலவர்" என்னும் பட்டமும் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் "சித்தாந்தக் கலைச்செல்வர்" என்னும் சிறப்புப் பட்டமும் வழங்கப்பெற்ற சிறப்புடையவர்கள்.

இதுதான் நாம் உண்மையில் சைவ சமயத்திற்கு ஆற்றும் தொண்டாகும். சாத்திர அடிப்படையில் சொல்வதென்றால் ஞான நூற்களைக் கற்பிப்போர் ஞானாசிரியர் ஆவார். அவர்க்கு நிதி வழங்குவது மிகப்பெரிய சிவபுண்ணியமாகும்.

மதுரைத் திருவள்ளுவர் கழகம் எங்கள் முடிவைப் பாராட்டி அக்கழகத்தின் மூலம் இத்தொகையை வழங்க உடன்பட்டது. தமிழ்நாடெங்கணும் உள்ள சைவ சமயப் பேரன்பர்கள் இவ்வறிவிப்பை ஏற்றுத் தாராளமாக நிதி உதவி அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்,

சித்தாந்தவித்தகர்,
புலவர்மணி,
முரு. பழ. இரத்தினம் செட்டியார்
விரையாச்சிலை.

சிவநெறிச்செம்மல்,
திருநெறிப்புலவர்,
சி. ராம. நாகப்ப செட்டியார்,
மதுரை.

உதவித்தொகையை டிராப்ட்டாகவோ, மணியார்டர் மூலமாகவோ, செக்காகவோ கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம். தொகை வழங்குகின்ற அன்பர்களின் பெயர்ப்பட்டியல் அச்சிடப் பெற்று மதுரைத் திருவள்ளுவர் கழக நிகழ்ச்சியில் வாசிக்கப் பெறும்.

C. RM. Nagappan,
85 G. Ramnad Road, MADUARI-9.

## நூல் பட்டியல் விபரம்

1. திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே.
2. திருக்குறள் துலக்கும் ஒழுக்க நெறி.
3. சைவம் H R. and C, E. Dept. Executive Officers பாடப்புத்தகம்.
4. திருக்குற்றாலத் தல புராண உரை.
5. சிவஞானபோதத் திறவு.
6. திருவுந்தியார் உரை.
7. சிவஞான பாடியத் திறவு.
8. சிவஞானபோத அறிமுகம்.
9. சைவ சித்தாந்தச் செந்நெறி.
10. திருமுறைச் செந்நெறி.
11. திருவருட்பயன்.
(பழைய உரை ஆராய்ச்சிக் குறிப்புகளுடன்)

12. திருமந்திரம் ஒன்பதாம் தந்திர உரை.
13. Four Lectures on Saiva Siddhanta in English.
14. "Saiva Siddhanta" in English in connection with World Tamil Conference Seminar.

---

## மாயூரத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி குருபூஜைவிழா - பெரியபுராண விரிவுரைவிழா

மாயூரத்தில் தெய்வத்தமிழ்மன்றம் அறக்கட்டளைகள் மூலம் விரிவுரைகள் பல நிகழ்த்தி மாயூரம் நகரப்பெருமக்களை சைவ சமய இலக்கியங்களிலும் பிற இலக்கியங்களிலும் ஈடுபடுத்தி வருகின்றது. அம்முறையில் இம்மன்றத்தில் தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழாவைக் கொண்டாடும் வகையில் 31—10—77 முதல் ஐந்து நாட்கள் பெரியபுராண விரிவுரை நிகழ்த்தப் பெற்றது. இவ்விரிவுரை தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருப்பெயரால் அமைக்கப்பெற்ற அறக் கட்டளையில் நிகழ்வது.

தருமையாதீனப் புலவரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் துணைப்பேராசிரியரும் ஆகியவித்துவான். திரு. கு. சுந்தரமூர்த்தி M. A. அவர்களால் "வாழ்க்கைத் துணை நலம்" "மக்கட்பேறு" "விருந்தோம்பல்" "அரசியல் திறன்" "ஞான மெய்ந்நெறி" என்ற தலைப்புக்களில் ஆராய்ச்சி நோக்கில் பெரியபுராண விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. இவ் விரிவுரை மாயூரம் நகராட்சி உயர்பள்ளிக்கட்டிடத்தில் நாள்தோறும் மாலை 6 மணி அளவில் இறை வணக்கத்துடன் தொடங்கப்பெற்று 4—11—77 ஆம் நாள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருபூஜை விழாவன்று நிறைவுற்றது. மாயூரம் தெய்வத் தமிழ் மன்றத் தலைவர் டாக்டர். திரு. மு. சுவாமிநாதன் M. B. B. S. அவர்களும் தெய்வத் தமிழ் மன்றச் செயலரும் செந்தமிழ்ப் புரவலரும் ஆகிய திரு. இரா. இராசசேகரன் B. Sc. B. L. அவர்களும் வரவேற்புரை நன்றியுரை முதலியன கூறி, விழா சிறப்புற நிகழ உதவினர். மாயூரம் நகரப்பெருமக்கள் பலர்கலந்துகொண்டு கேட்டுப் பயன் பெற்றனர். இறை வாழ்த்துடன் விழா இனிது நிறைவுற்றது.

---

உ
சிவமயம்

# ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பதும் நம்நாட்டில் வழங்கும்பழமொழிகள். மக்களைத்திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்தி, சைவ - சமயப் பெருமைகளை அறியச்செய்து உய்விக்கவேண்டும் என்ற பெருங்கருணையால் தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமது குருமூர்த்திகள் காட்டியருளிய வழியிலேயே தமது ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளிலும் பாடல்பெற்ற தலங்கள்தோறும் முறையான வழிபாட்டிற்கு வழிகாட்டி வருகிறார்கள். மாதந்தோறும் காவிரி வடகரைத் தலங்களில் வழிபாடு நடைபெறுகின்றன. உழவாரப்பணி விசேட அபிடேக ஆராதனைகள், தலத் திருப்பதிகங்களை அச்சிட்டு ஓதிவழங்குதல், சமயப்பிரசாரம் முதலியன ஆயில்யத்திருநாள் வழிபாட்டின் அங்கங்களாகும்.

பிங்கள ௵ கார்த்திகைத்திங்கள் 17-ஆம் நாள் (2-12-77) வெள்ளிக்கிழமையன்று மாத ஜன்மநட்சத்திர மாதலின் திருப்பாற்றுறையிலும் திருவானைக்காவிலும் வழிபாடு சிறப்புற நடைபெறும்.

(1) திருப்பாற்றுறை ஸ்ரீ மோகநாயகி உடனுறைய ஸ்ரீ திருமூலநாதர் திருக்கோயிலில் காலை 11-மணி முதல் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும் நடைபெறும்.

(2) திருவானைக்கா ஸ்ரீ அகிலாண்டநாயகி உடனுறைய ஸ்ரீ ஜம்புகேசுவரர் திருக்கோயிலில் மாலையில் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும் நடைபெறும்.

---

வழிபாட்டின்போது

தருமபுர ஆதீனக் கல்லூரி முதல்வர்,

**வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள்**

விரிவுரை நிகழ்த்துவார்கள்.

அனைவரும் வருக! வழிபட்டு உய்க! அரன் அருள் பெறுக!

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## முப்பத்தாரும் ஆண்டு மலர்ப் பொருளடக்கம்


| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 1 | அண்டத்து அரும்பெறல் மேகன் | 27, 75 |
| 2 | அல்லாப் பிள்ளையார் | 105 |
| 3 | அறநிலையங்களின் வளர்ச்சிக்கு ஆலோசனை | 429 |
| 4 | அறநிலையம் பற்றிய வரவேற்கத்தக்க கொள்கை | 510 |
| 5 | அன்னை அடிமலர் போற்றுவோம் | 529 |
| 6 | அன்னை அருள் மாலை | இதழ் 12 iv |
| 7 | ஆதி சங்கரரும் திராவிட சிசுவும் | 72 |
| 8 | ஆயிரம் ரூபாய் காணிக்கை செலுத்தி அருள் பெறுங்கள் | 163 |
| 9 | ஆயில்யத் திருநாளில் ஆலய வழிபாடு | 168, 222, 272, 375, 422, 464, 560, 628 |
| 10 | ஆஸ்துமாவைக் குணப்படுத்தும் மூலிகை | 344 |
| 11 | இரத்த தானம் ஆரோக்கியம் அளிக்கிறது | 519 |
| 12 | இலக்கணக்கொத்தில் சைவக் கருத்துக்கள் | 354, 413 |
| 13 | உங்கள் திறமைக்கோர் சோதனை | 35, 64 a |
| 14 | உதவித் தொகை வழங்கல் | 625 |
| 15 | எதிர்காலம் | 44, 83, 147, 204, 256, 309, 370, 423, 472, 520, 572, 620 |
| 16 | கடிதம் | இதழ் 1 iv, 198, 223, 339, 444, 476, 502 |
| 17 | கவசத் திருநீறு | 477 |
| 18 | களேபரம் | 605 |
| 19 | கனக மன்றில் அனக நாடகன் | 164, 243 |
| 20 | காஞ்சிபுரம் தொண்டை மண்டலாதீனம் 229 வது மகாசந்நிதானத்தின் பரிபூரணம் | 455 |
| 21 | குருபூஜை | 261 |
| 22 | குரு வணக்கம் | 559 |

| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 23 | கேள்வி - பதில் | 387 |
| 24 | கோடைக்கால சமயப் பயிற்சி வகுப்பு | 276 |
| 25 | கோயிலில் சிந்திய குருதி | 587 |
| 26 | சகலாகம சார சங்கிரகம் | 102, 182, 246 |
| 27 | சங்கம் தரும் முத்தும் முத்தியும் | 291 |
| 28 | சனிப் பெயர்ச்சி | 491 |
| 29 | சிவமூர்த்தங்கள் | 109, 179, 287, 340, 416 |
| 30 | சிவராத்திரி விரதச் சிறப்பு | 89 |
| 31 | சிவ வழிபாடு | 192 |
| 32 | சிவாலயச் சோழநாடு | 113 |
| 33 | சிறுகதை ( என்னைக்கண்டுகொள்ளே ) | 561 |
| 34 | சிறுவர்களுக்கு | 152, 157, 223, 390 |
| 35 | சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் சில அரிய சொல்லாட்சிகள் | 538, 599 |
| 36 | செய்திகள் | 37, 80, 136, 200, 249, 300, 364, 419, 466, 512, 566, 611 |
| 37 | சென்ற இதழ்க் கணக்கு விடை | இதழ் 1 iv, 88 |
| 38 | சொக்கநாதவெண்பாவில் காணப்பெறும் சிவபெருமான் பற்றிய விளிகள் | 31 |
| 39 | ஞானசம்பந்தம் முப்பத்தைந்தாம் ஆண்டுமலர்ப் பொருளடக்கம் | இதழ் 1 i |
| 40 | ஞானசம்பந்தம் முப்பத்தாறும் ஆண்டுமலர்ப் பொருளடக்கம் | இதழ் 12 i |
| 41 | தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை | 8, 56. 93, 158. 218, 266, 319, 382, 437, 484. 533, 582 |
| 42 | தருமையில் ஒருநாள் | 442 |
| 43 | தர்மம் தலைகாக்கும் | 209 |
| 44 | தலச் சிறப்புக்கள் | 17, 65, 122, 169, 225, 277, 329, 393, 445, 506, 545, 593 |
| 45 | திருத்தருமையாதீனம், ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயில் பெருவிழா அழைப்பிதழ்-திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகள் | இதழ் 6 க |

| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 46 | திருப்பணி வேண்டுகோள் | 144 |
| 47 | திருவாசகத்தில் சைவசித்தாந்தம் | 391, 459, 493, 551 |
| 48 | திரு. V. K. இராமசாமிமுதலியார் ஆற்றிய உரை | 327 |
| 49 | திருவிளக்கு அறக்கட்டளை நிதி | 362, 418, 471, 490, 571, 610 |
| 50 | திருவோத்தூரில் குடமுழுக்கு விழா | 37 |
| 51 | தீபாவளி | 590 |
| 52 | தையல்நாயகி தெய்வமானுள் | 389 |
| 53 | நடராஜ சதகம் - மதிப்புரை | 224 |
| 54 | நல்லறம் காத்து நாடாள்க | 377 |
| 55 | நான்கு வேதம் ஏன்? | 199 |
| 56 | நீண்டநாள் வாழ்வது எப்படி? | 108 |
| 57 | பக்திமிக்க பாரதப் பிரதமரைப் பாராட்டுகிறோம் | 214 |
| 58 | பரம்பரைத் தொண்டு | 345 |
| 59 | பரம்பொருளின் பார்வை | 153 |
| 60 | பரிமேலழகருக்கு ஒரு சொல் | 296 |
| 61 | பார்வையாளர் குறிப்பு | 14, 108, 121, 178, 197, 242, 248, 265, 275, 328 b, 338, 343, 344, 374, 376, 428, 444 a, 444 b, 458 470, 505, 514, 553, 558, 559, 565, 576, 592, 609, 610 |
| 62 | பிங்கள! நீ வருகின்ருய் | 221 |
| 63 | பிரார்த்தனை | 360 |
| 64 | புத்தாண்டு வாழ்த்து | 15 |
| 65 | பொங்கல் வாழ்த்து | இதழ் 2 க. |
| 66 | மண்டலாபிஷேகக் கிருத்திகை மாண்பு | 313 |
| 67 | மதிப்புரை (சித்தாந்த விளுவிடை) | 273 |
| 68 | மலர்கள் | 503 |
| 69 | மனத்தைக் கவர்ந்த மணி விழா | 525 |
| 70 | மாணவர்களுக்கு அறிவுரை | 504 |
| 71 | மாதஜன்மநட்சத்திர வழிபாடு | 47, இதழ் 2 க |
| 72 | மெய்கண்ட நூல்கள் | 498, 554, 601 |
| 73 | யுக தர்மங்கள் | 187 |

| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 74 | வரிச்சுமை குறையட்டும் | 49 |
| 75 | வாரியார் வாக்கு | 16 |
| 76 | வாழ்த்துச் செய்தி | இதழ் 2 உ |
| 77 | வியன் குருவாய்வந்து அருள்க | 43 |
| 78 | வினைதீர்த்தான்கோயில் விளக்கீடு அறக்கட்டளை வேண்டுகோள் | 133 |
| 79 | வினையும் விளைவும் | 577 |
| 80 | வைகறைத் துயிலெழு | 1 |
| 81 | ஸ்ரீ மௌனகுரு, ஸ்ரீ தாயுமான சுவாமிகள் குருபூசை விழா | 167 |
| 82 | ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் | 443 |

---

# அன்னை அருள்மாலை

திருமுறை இன்னிசைவாணர்,
வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்

தில்லைச்சிவ காமிவேட் களநல்ல நாயகி
திருநெல்வாயிற் கனகாம்பிகை
திருக்கழிப் பாலையுள் வேதநாயகியம்மை
திகழுநல் லூர்ப்பெருமணம்
எல்லையில்லாப்புகழ் திருவெண்ணீற்றுமையம்மை
எழில்மயேந் திரப்பள்ளியுள்
இலங்குவடி வாம்பிகைதென் திருமுல்லைவாயில்நக
ரிணையிலாக் கோதையம்மை
கொல்லைவிடையானுறை கலிக்கா மூரழகம்மை
கோதிலாச் சாய்க்காட்டினில்
குயிலினுநன் மொழிபல் லவனீச்சரம்குடி
கொண்ட சௌந்தர நாயகி
பல்லுயிர் பணிவெண்கா டுபிர்மவித்யாவுமை
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற்கருள் அன்னையே. (1)